விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 213 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 04 வியாழக்கிழமை (20.07.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ்.பல்கலைக்கழகத்தின் 37ஆவது பட்டமளிப்பு விழா



03

## வடக்கில் தேசிய அடையாள அட்டை பெறுவது குறித்து விசேட நடவடிக்கை

### சபையில் அமைச்சர் டிரான் அலஸ்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில்தேசிய அடையாள அட்டையை பெறுவது குறித்து விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்வதில் வடக்கு மாகாண மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் நேற்று பாராளுமன்றின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக பதிலளித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ் விடயம் 15

## இந்தியா தலைமை ஏற்று
# இனப் பிரச்சினையை தீர்க்க வேண்டும்



### பாரத பிரதமர் மோடிக்கு உருத்திரகுமாரன் கடிதம்

(வோஷிங்டன்)

தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையை இந்தியா தலைமையேற்று தீர்த்து வைக்க வேண்டும் என பாரதப் பிரதமர் மோடிக்கு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் தலைவர் வி.உருத்திரகுமாரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை நீடிப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஊடாக இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை 2027 டிசம்பர் 31 வரை மேலும் 04 ஆண்டுகளுக்கு நீடிக்க ஐரோப்பிய ஆணைக்குழு நேற்று தீர்மானித்துள்ளது.

இந்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதியுடன் இந்த வரிச்சலுகை முடிவடைய இருந்தது.

புதிய ஜி.எஸ்.பி பிளஸ் முறைமை 15

11 மில்லியன் ரூபாய் பெறுமதியான

## கேரள கஞ்சா வடமராட்சியில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதியில், சுமார் 11 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவை நேற்று



15

## வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் பிரத்தியேக வகுப்புகளுக்கும் தடை

### யாழ்.மாவட்ட அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெள்ளி ஞாயிறு ஆகிய தினங்களில் தனியார் வகுப்புகள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பிரத்தியேக வகுப்புகள் இடம்பெறுவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. அவர்களும் இந்த விதிமுறைகளுக்கமைய செயற்பட வேண்டும் தவறும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் 04

## ரணில் - சஜித் இணைவதை மக்கள் விரும்புகின்றனர்

### மனோ கணேசன் தெரிவிப்பு

(கொழும்பு)

ரணிலும் சஜித்தும் இணைந்தால் நல்லது என மக்கள் விரும்புவதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்"

ஜனாதிபதி ரணிலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும் இணைந்தால் 15

## வவுனியாவில் தீப்பற்றி எரிந்த உணவகம்

(வவுனியா)

வவுனியா நகரில் அமைந்துள்ள உணவகமொன்று நேற்றிரவு 8.25 மணியளவில் திடீரென தீப்பற்றியமையினையடுத்து பலத்த போராட்ட 15



## இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில்

### பாரதப் பிரதமருடன் பேசுவேன் – அமைச்சர் டக்ளஸ்

(கொழும்பு)

ஜனாதிபதியுடனான இந்திய விஜயத்தின்போது இந்தியமீனவர்களின் அத்துமீறல் மற்றும் அவர்களின் இழுவைமடித் தொழில்முறை பற்றி இந்திய பிரதமர் மற்றும் உயரதிகாரிகளு 15

கடும் காற்று


## மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

சீரற்ற வானிலை மற்றும் கடும்காற்று காரணமாக மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு கடற்றொழிலாளர்களை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
17 . 05 . 1957

மறைவு
18 . 07 . 2023

# தம்பிராசா தருமரத்தினம்

**( உரிமையாளர் - சென்றல் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்,
சங்கர் மோட்டோர்ஸ், சுன்னாகம் )**

சண்டிலிப்பாய் மத்தி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பிராசா தருமரத்தினம் அவர்கள் 18.07.2023 அன்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகனும் இராசேந்திரம் - அன்னலட்சுமி தம்பதியினரின் அன்பு மருமகனும் சறோஜாதேவியின் அன்புக் கணவரும் கஜரதன்(சென்றல் மோட்டோர்ஸ்), பத்மாயினி, சுபாசினி (மாணவி - ஊவா வெல்லஸ பல்கலைக்கழகம்), சங்கஜன் (சங்கர் மோட்டோர்ஸ்), சிவதர்சினி, கஜரூபன் ஆகியோரின் அன்பு தந்தையும் விதுஷா, டினேஸ்(LOLC Finance) ஆகியோரின் அன்பு மாமனாரும் டிபிக்சனின் அன்பு பேரனும் பாலசுப்பிரமணியம், சிவபாக்கியம், சிவகுருநாதன்(அமரர்), சிவராசா, குணராசா, கமலாதேவி, விமலாதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்பு சகோதரனும் புஸ்பராணி, நாகமுத்து(அமரர்), கலாவதி, சரோஜாதேவி, வேவி, நாகராசா, சிவசக்திநாதன் மற்றும் விக்கினேஸ்வரன் - கவிப்பிரியா, சிவகாந்தன் - தமிழ்ச்செல்வி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
077 664 2897

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா















(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா நேற்று புதன்கிழமை காலை யாழ்.பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் ஆரம்பமாகிய நிலையில் நாளை வெள்ளிக்கிழமை வரை இடம்பெறவுள்ளது.

8 அமர்வுகளாக இடம்பெறவுள்ள இப் பட்டமளிப்பு விழாவில் 2,278 பேர் பட்டங்களையும் தலைமைச் சான்றிதழையும் பெறவுள்ளனர்.

மேலும், ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராஜா தங்கப்பதக்கத்தை பீட மட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம், கலைப்பீடம் மற்றும் மருத்துவபீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக்கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (4-5-33)

# அதிகரித்த மதுபாவனை காரணமாக நரம்பியல் நோய்கள் அதிகரிப்பு

## நரம்பியல் வைத்திய நிபுணர் அஜந்தா

(யாழ்ப்பாணம்)

அதிகரித்த மது பாவனையின் காரணமாக வடக்கில் நரம்பியல் சார் நோய்த்தாக்கம் அதிகரித்துள்ளதாக நரம்பியல் வைத்திய நிபுணர் அஜந்தா கேசவராஜா தெரிவித்தார்.

நேற்று யாழில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில், அதிகரித்த மது பாவனையின் காரணமாக வடக்கு மாகாணத்தில் நரம்பியல் சார்ந்த நோய்கள் அதிகரித்துள்ளன.

இதனால் இன்சுலின் உற்பத்தி தடைப்படுகின்றது. மது பாவனையை தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதே போல போதைப் பொருள் பாவனையும் நரம்பியல் சார் நோய்கள் அதிகரிப்புக்கு ஒரு காரணமாக உள்ளது.

குறிப்பாக இளையவர்கள் நரம்பியல் நோய்கள்,திடீர் மாரடைப்பு மற்றும் பக்கவாதம் போன்ற நோய்களுக்கு உள்ளாகின்றார்கள்.

எனவே அதிகரித்துள்ள மது பாவனை,போதைப்பொருள் பாவனையினால்அவர்கள் அறியாமலே அவர்களுக்கு மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.



இந்த மதுபாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு சமூக ஆர்வலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-5-33-104)

# டெங்கு தடுப்பு பணியாளர்ளுக்கு அநீதி இழைக்கும் அரசாங்கம்

## கஜேந்திரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

டெங்கு தடுப்புப் பிரிவு உதவியாளர்கள் விடயத்தில் அரசாங்கம் அநீதி இழைப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினுடைய பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை வடக்கு மாகாண சபை முன்பாக டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நிரந்தர நியமனம் மற்றும் சம்பள உயர்வு கோரி போராட்டத்தை முன்னெடுத்திருந்த நிலையில் அவர்களுக்கு ஆதரவாக போராட்ட இடத்திற்கு வருகை தந்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

டெங்கு தடுப்பு உதவியாளர்கள் நீண்டகாலமாக தற்காலிக அடிப்படையில் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் குடும்ப முழுச் சுமைகளையும் ஏற்க வேண்டியவர்களாக உள்ளனர்.

ஆனால் அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 750 ரூபாய் கொடுப்பனவே வழங்கப்படுகின்றது. கடமைக்கு செல்லாவிட்டால் அந்தக் கொடுப்பனவும் மறுக்கப்படுகின்றது.

இதனால் இவர்கள் குடும்பத்தில் உள்ள சிறுவர்கள் மற்றும் தாய்,தந்தையர்களை பராமரிக்க முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

டெங்கு ஓர் உயிர்கொல்லி நோய். நாடு முழுவதும் டெங்கு தொடர்பாக அதிக கரிசனை காட்டப்படுகின்றது. ஆனால் டெங்கு தடுப்பு பணியாளர்களுக்கு அநீதி இழைக்கப்படுகின்றது.

இவர்கள் தமது உயிரை பணயம் வைத்து நாட்டு மக்களின் நலனுக்காக உழைக்கின்ற போதிலும் அவர்களுக்கு உரிய அந்தஸ்தினை அரசாங்கம் கொடுக்க தவறியுள்ளது என அவர் தெரிவித்தார். (4-5-30)

# வடக்கு மாகாணசபை முன்பாக சுகாதார தொண்டர்கள் கவனயீர்ப்பு



(சாவகச்சேரி)

கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாணசபை முன்பாக நேற்று புதன்கிழமை காலை வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் தமது நியமனத்தை உறுதிப்படுத்தக்கோரி கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது சுகாதார தொண்டர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் 2002 ஆம் ஆண்டில் இருந்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாகவும் வைத்தியசாலைகளிலும் சுகாதார தொண்டர்களாக கடமையாற்றி வருகிறோம்.

தற்போது சம்பளம் இன்றி நாம் பணியாற்றி வருகின்ற நிலையில் வெளியில் இருந்து சுகாதார பணியாளர் நியமனம் மேற்கொள்ளப்படுகின்றது.எமது நியமனம் தொடர்பில் எந்தவித மான முடிவும் எட்டப்படவில்லை என மேலும் அவர்கள் தெரிவித்தனர். (4-5-30)



இங்கிலாந்தைச் சேர்ந்த நூலியலாளர் என். செல்வராஜாவின் யாழ்ப்பாணம் பொதுநூலக வரலாறு தொடர்பிலான பல்வேறு அரிய தகவல்களையும் கொண்ட "Rising from the Ashes" என்ற ஆங்கில நூலும் யாழ்ப்பாண பொது நூலகம் என்கிற தமிழ் நூலினதும் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை யாழ்.பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. (படம்:-சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




யாழ்.கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவிற்குரிய விளையாட்டு மைதான திறப்பு விழா 16.07.2023 அன்று இடம்பெற்றவேளை மைதானத்திற்குரிய காணியை அன்பளிப்பாக வழங்கிய பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்கள் பாடசாலைச் சமூகத்தினரால்

**"தண்ணளி வேந்து"**

என்னும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டுவதோடு அவர்களின் சேவை மென்மேலும் தொடர நாமும் அவர்களை வாழ்த்துகின்றோம்.

**மக்கள் நலன் பேணும் அமைப்பு**

**கோண்டாவில்**

(16347)


# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை - மானிப்பாய் பட்டின உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர்: மகாலிங்கம் சுரேஸ்குமார் பெண் நாமகள்**
**முகவரி: ஆதன இல 73, மூத்ததம்பி ஒழுங்கை, வட்டாரம் 12**

வட்டாரம் 12, மூத்ததம்பி ஒழுங்கை, ஆதன இலக்கம் 73 இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வட மாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று மானிப்பாய் இறை "இலுப்பை தோட்டமும் மங்கன் தோட்டமும்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 03 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் மானிப்பாயை சேர்ந்த முருகையா வேலையாவும் பெண் மகேஸ்வரியும் ஆகியவர்களால் இவ் ஆதனத்தின் உரிமையாளர்கள் தாமே என பிரசித்த நொத்தாரிசு பரமகுரு இராசகுரு அவர்களால் எழுதப்பட்ட 5816ம் இலக்க 30.07.2006ம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். மேலும் இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு பரமகுரு இராசகுரு அவர்களால் எழுதப்பட்ட 5949ம் இலக்க 03.03.2007ம் திகதிய உறுதி மூலம் மகாலிங்கம் சுரேஸ்குமார் பெண் நாமகள் என்பவருக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் P.புஷ்பராஜா அவர்களால் வரையப்பட்ட 11573ம் இலக்க 01.07.2022ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் "இலுப்பை தோட்டமும் மங்கன் தோட்டமும்" நிலப்பரப்பு 02 குளி 17.31 கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு,

வடக்கு - A.ஞானப்பிரகாசம்
கிழக்கு - வீதி
தெற்கு - ஒழுங்கை
மேற்கு - V.K.இராசலிங்கம் செல்லையா மற்றும் ஏனையோர் உ.கோ வேலையாவும் மகேஸ்வரியும்

மேற்குறித்த ஆதனத்தை **மகாலிங்கம் சுரேஸ்குமார் பெண் நாமகள்** என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(16346)

# இலங்கை கிரிக்கெட் பிரிவு – III

## மதூஸன் தலைமையிலான சென்றல் அணி பிரிவு E இல் 1 ஆம் இடத்துக்கு தகுதி



இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2023 இற்கான தொடரை யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தி வருகின்றது.

அதன் அடிப்படையில் பிரிவு E இல் ஓல்ட் கோல்ஸ், யூனியன்ஸ், யாழ் சென்றல் அணிகள் பங்குபற்றுகின்றன.

முதலாவது போட்டியில் யாழ். சென்றல் அணி, ஓல்ட் கோல்ஸ் அணியை 83 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இரண்டாவது போட்டியில் ஓல்ட்கோல்ஸ் அணி யூனியன்ஸ் அணியை 49 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

மூன்றாவது போட்டியில் யாழ். சென்றல் அணி, யூனியன்ஸ அணியை 30 ஓட்ட ங்களால் வெற்றி பெற்றுள்ளது.

பிரிவு E இல் யாழ். சென்றல் அணி 2 போட்டிகளில் (ஓல்ட் கோல்ஸ், யூனியன்ஸ்) வெற்றி பெற்றுள்ளமையால் 1 ஆம் இடத்தை (Winners) கைப்பற்றியுள்ளது. ஓல்ட் கோல்ஸ் அணி ஒரு போட்டியில் (யூனியன்ஸ்) வெற்றி பெற்றுள்ளமையால் 2 ஆம் இடத்தை (Runners) கைப்பற்றியுள்ளனர்.

இவ்விரு அணிகளும் கால் இறுதி முன் போட்டிக்கு (PRE, QUARTER FINALS) தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது (4)

# ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்

## பதக்கப் பட்டியலில் இலங்கை 4 ஆம் இடம்



தாய்லாந்தின் பாங்கொக்கில் நடைபெற்ற 25 ஆவது ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் நிறைவு பெற்றுள்ளது.

கடந்த 12ஆம் திகதி முதல் 17 வரை நடைபெற்ற இத்தொடரின் பதக்க பட்டியலில், ஜப்பான் 16 தங்க பதக்கங்கள், 11 வெள்ளி பதக்கங்கள் மற்றும் 10 வெண்கல பதக்கங்களுடன் ஒட்டுமொத்தமாக 37 பதக்கங்களுடன் முதலிடத்தை பிடித்தது.

இதனைத் தொடர்ந்து சீனா 8 தங்கப் பதக்கங்கள், 8 வெள்ளி பதக்கங்கள் மற்றும் 6 வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டு மொத்தமாக 22 பதக்கங்களுடன் இரண்டாவது இடத்தையும் இந்தியா 6 தங்கப் பதக்கங்கள், 12 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 9 வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டுமொத்தமாக 27 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

தொடரின் இறுதிநாளான நேற்று இலங்கை அணி 2 தங்கப் பதக்கங்களையும் ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் வென்றது.

இதன்மூலம் ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் 3 தங்கம், 2 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டுமொத்தமாக 8 பதக் கங்களை வென்ற இலங்கை அணி புள்ளிப் பட்டியலில் 4 ஆவது இடத்தைப் பிடித்தது.

25 ஆண்டுகால ஆசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகள் வரலாற்றில் ஒரு அத்தியாயம் ஒன்றில் இலங்கை அணி வென்ற அதிகபட்ச பதக்கங்களாகவும் புள்ளிப் பட்டியலில் அதிஉயர் இடத்தையும் பிடித்து சாதனை படைத்தது.

இதற்கு முன் 2002 இல் இலங்கையில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுநர் சம்பியன் ஷிப்பில் இலங்கை அதிகபட்சமாக 3 தங்கப் பதக்கங்களை வென்றிருந்தது. (4)

## வெள்ளி, ஞாயிற்...

தெரிவித்தார்.

தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களுக்கும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்படி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

தனியார் கல்வி நிலைய பிரதிநிதிகளுக்கும் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் அவர்களுக்குமிடையிலான கலந்துரையாடல் அண்மையில் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலில்,

தனியார் கல்வி நிலைய பிரதிநிதிகளால் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புக்களை நிறுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் ஞாயிற்றுக்கிழமைகளில் மதியத்திற்குப் பின்னர் வகுப்புக்களை நடாத்த அனுமதி வழங்குமாறும் அதே வேளை க.பொ.த சாதாரணதர பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் தரம் 9 ஆம் வகுப்பிலிருந்து ஆரம்பிப்பதால் அம் மாணவர்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தனியார் கல்வி நிலையங்கள் வகுப்புக்களை நிறுத்தும் அதேவேளை பிரத்தியேக வகுப்புக்கள் இடம்பெற்று வருவதை கட்டுப்படுத்துமாறும் அந்நிறுவனங்களின் பதிவுகளை மேற்கொள்ள அறிவுறுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டன.

மேலும் தொடர்ச்சியாக ஏழு நாட்களும் பிள்ளைகள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதால் ஏற்படும் உளப்பாதிப்பை குறைக்கும் நோக்கிலேயே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது எனவும் பிள்ளைகளின் உளசமூக செயற்பாட்டினை மேம்படுத்தவும் அறநெறிக்கல்வியினை ஊக்குவிக்கும் முகமாகவும் சிறுவர்களை பாதுகாக்கும் நோக்கிலும் அவர்களை சமூக விருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி ஊக்குவிக்கும் முகமாகவும் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கேற்ப வகுப்புக்களை மீள ஒழுங்குபடுத்தி செயற்படுமாறும் அரசாங்க அதிபரால் கேட்டுக்கொள்ளப்பட்டதுடன் மேலும் பாடசாலை நேரங்களுக்கு புறம்பாக மேற்படி தீர்மானங்களுக்கு கட்டுப்படாத குழு வகுப்புக்கள் தொடர்பாக எதிர்வரும் காலத்தில் உரிய நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் தடுப்பூசி தொடர்பில்


# சந்தேகம் தேவையில்லை

## தொற்றுநோய் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சமித்த கினிகே

(கொழும்பு)

தேசிய நோய்த்தடுப்புத் திட்டத்தின் கீழ் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் தொடர்பில் சந்தேகம் ஏதும் தேவையில்லை எனவும், அதற்கமைய அந்த தடுப்பூசிகளை சிறுவர்களுக்கு கட்டாயமாக வழங்க வேண்டும் எனவும் தொற்றுநோய் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சமித்த கினிகே வலியுறுத்தினார்.

மேலும் தேசிய நோய்த்தடுப்புத் திட்டத்துக்காக கொண்டுவரப்பட்ட தடுப்பூசிகள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தரத்தை உறுதிப்படுத்தியவை மட்டுமே என அவர் குறிப்பிட்டிருந்தார்.



அதற்கிணங்க, நோயைத் தடுப்பதற்காக உரிய தடுப்பூசிகளை பிள்ளைகளுக்குப் பெற்றுக்கொடுக்க பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டுமெனவும், இல்லையேல் அது பல நோய்கள் அதிகரிக்கக் காரணமாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, ஹெட்டிபொல சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் தடுப்பூசி போடப்பட்டதன் பின்னர் உயிரிழந்ததாக கூறப்படும் குளியாபிட்டிய மரணம் தொடர்பில் சுகாதார அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# ஊழல் எதிர்ப்புச்சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

(கொழும்பு)

ஊழல் எதிர்ப்பு சட்டமூலம் நேற்று திருத்தங்களுடன் பாரா ளுமன்றில் நிறைவேற்றப்பட் டது.

குறித்த சட்டமூலம் 193 திருத்தங்களுடன் பாராளுமன் றத்தில் நிறைவேற்றப்பட்டுள் ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு அமைய கடந்த 6 ஆம் திகதி குறித்த சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை சித்திர பாட ஆசிரியை
திருமதி.தபோதினி விமல்ராஜ்
அவர்களின் அன்புத்தந்தை

அமரர். இளையதம்பி
கிருஷ்ணமூர்த்தி (JP)

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(63343)



அதிபர்,ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.



# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1968 . 04 . 10



மறைவு 2023 . 07 . 17

அமரர். வேலாயுதம் சிவசக்திவேல் (SLPS-I)

(பிரதி அதிபர்-யா/இணுவில் இந்துக் கல்லூரி)

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதோடு
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!

(சு-6940)

பாடசாலைச் சமூகம், யா/ இணுவில் இந்துக் கல்லூரி.


# இராசிபலன்

20.07.2023
ஆடி 04, வியாழக்கிழமை
திருதியை பின்னிரவு 5.58 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 11.01 மணிவரை

சுபநேரம் -7.31-9.01 மணிவரை
இராகுகாலம்-1.31-3.01 மணிவரை

சந்திராஷ்டமம்-
உத்தராடம்
திருவோணம்.

வளவன்




அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும், உதிரிவருமானங்கள் வந்து சேரலாம்,புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




உறவினர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்,தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம்,வழிபாடு காரிய வெற்றி தரும்.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நன்மைகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள்.




நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், குடும்பச் சுமை கூடும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.





உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும் அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பயணங்களால் பலனுண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.




அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும் நாள்.




கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம்.




மதிநுட்பத்தால் மகத்தான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு,உடல் நலனில் உற்சாகம் பெருகும் நாள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியுள்ள மனிதனாக இருக்க முயற்சி செய்யாதே ஆனால் மதிப்புடைய மனிதனாக இருக்க முயற்சி செய்.

# அதிகரிக்கும் டெங்கு மரணங்கள் 24 மணித்தியாலத்தில் இருவர் பலி

(கொழும்பு)

நாட்டில் கடந்த 24 மணித்தியாலங்களில் 2 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய,இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 36 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதேவேளை, டெங்கு அதி அபாய வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள மருத்துவ அதிகாரி பிரிவுகளின் எண்ணிக்கை 50 ஆக அதிகரித்துள்ளது.

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 53700 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் 26 702 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# பாகிஸ்தானுக்கான உயர்ஸ்தானிகராக ரவீந்திர விஜேகுணரத்ன நியமனம்



(கொழும்பு)

பாகிஸ்தானுக்கான உயர்ஸ்தானிகராக அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் அவர் கடற்படைத் தளபதியாகவும் பாதுகாப்புப் படைகளின் பிரதானியாகவும் செயற்பட்டுள்ளார்.

குறித்த பதவிகளில் இருந்து ஓய்வு பெற்றதன் பின்னர், பெற்றோலிய கூட்டுத் தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளராகவும் கடமையாற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சிலாபத்தில் தீப்பரவல்
## 25 ஏக்கர் நிலப்பரப்பு தீக்கிரை

(புத்தளம்)

சிலாபம் பெருந்தோட்டம் நிறுவனத்திற்குச் சொந்தமான புத்தளம் தம்பபண்ணி பகுதியில் நேற்று முன்தினம் இரவு பாரிய தீ ஏற்பட்டுள்ளது.

இதன்போது சுமார் 25 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பு தீக்கிரையாகியுள்ள நிலையில் தென்னை மரங்கள், மரமுந்திரிகை மரங்கள் மற்றும் பயன்தரும் பல மரங்களும் தீக்கிரையாகியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தீ பரவியமைக்கான காரணம் இதுவரையிலும் கண்டறியப்படவில்லையென்றும் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

# பேக்கரி உற்பத்திகளின் விலை குறையாது

### பேக்கரி உற்பத்தியாளர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரிமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் கோதுமை மாவின் விலையை 10 ரூபாவினால் குறைத்துள்ள நிலையில், பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலையை மீண்டும் குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலையை 25 ரூபாவினால் குறைப்பதாக கோதுமை மா நிறுவனங்கள் தமது சங்கத்திற்கு உறுதியளித்திருந்ததாக அதன் தலைவர் என்.கே.ஜயவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு வாக்குறுதி அளித்து ஒரு கிலோகிராம் கோதுமை மாவின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலையை குறைக்க முடியாது என அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.(நி-5)



# இலங்கை பொருளாதார மீட்சியில் விரைவான முன்னேற்றம் கண்டுள்ளது

### உலக வங்கி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை பொருளாதார மீட்சியில் விரைவான முன்னேற்றம் கண்டுள்ளதுடன், சரியான திசையில் சென்று கொண்டிருக்கிறது என உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பாரிஸ் கடாட் சேவோர்ஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் 70 சதவீதமாக இருந்த பணவீக்கம் தற்போது 12 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், இலங்கையின் வட்டி விகிதங்கள் மற்றும் எதிர்மறையான வளர்ச்சி வீதங்கள் குறைவடைந்துள்ள அதே வேளை, பல பொருளாதார அடிப்படைகளும் வீழ்ச்சியடைந்து வருவதாக தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இலங்கையர் எதிர்கொண்ட பாரிய போராட்டங்களின் விளைவாக பல சிரமங்களை தாம் தனிப்பட்ட முறையில் அனுபவித்ததாக உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் தெரிவித்தார்.

அந்த இடத்தில் இருந்து இலங்கை வேகமாக மீண்டுள்ளதுடன், நிலைமை மேலும் முன்னேற்றமடைவதற்கான தெளிவான அறிகுறிகள் தென்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இலங்கை முழுமையாக மீளவில்லை எனவும் இந்த வரலாறு மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய நட



வடிக்கை எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

ஏழை மற்றும் நலிந்த மக்களை உயர் நிலைக்கு கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (நி-5)

# மதஸ்தலங்களை பதிவு செய்ய அரசாங்கம் தீர்மானம்- விதுர

(கொழும்பு)

நாடு முழுவதும் உள்ள வழிபாட்டுத் தலங்கள் மற்றும் சொத்துக்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்காலத்தில் மதஸ்தலங்கள் பதிவு செய்யப்படும் என புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று ஊடகங்களுக்குக்



கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, மகா நாயக்கர் மற்றும் ஏனைய மதத் தலைவர்களின் அனுமதியுடன் இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்படி, எதிர்காலத்தில் கிராம உத்தியோகத்தர்களின் எல்லைக்குள் இருக்கக்கூடிய வழிபாட்டுத்தலங்களுக்கான அளவுகோல்களை தயாரிக்க அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# அபராதத் தொகையை அதிகரிப்பதன் மூலம் வீதிவிபத்துக்களைக் குறைக்க முடியும்

### நிஹால் தல்துவ தெரிவிப்பு

(கொழும்பு)

வீதிவிபத்துக்களால் மரணங்கள் ஏற்படும் போது சம்பவத்துடன் தொடர்புடைய சாரதி, விஷ போதைப்பொருட்களைப் பயன்படுத்தியுள்ளாரா? என்பதைக் கண்டறிவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஆரம்பக்கட்ட செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாரதிகளின் கவனயீனமே, பெரும்பாலான வீதிவிபத்துக்களுக்கு காரணமாகும் என



நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில், பொலிஸ் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

மதுபானம் அல்லது போதைப்பொருளைப் பயன்படுத்தியவாறு வாகனங்களை செலுத்துவோருக்கு எதிராக, வீதி விதி தொடர்பான சட்டத்திற்கு அமைய 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்க முடியும்.

அத்துடன், சாரதி அனுமதிப் பத்திரத்தை தற்காலிகமாக இடைநிறுத்த முடியும்.

அபராதத் தொகையை அதிகரிப்பதன் மூலம், வீதிவிபத்துக்களை குறைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய பிரதி உயர்ஸ்தானிகர்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சந்திப்பு



(கொழும்பு)

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதி உயர்ஸ்தானிகராக கடமையாற்றி தனது பதவிக் காலத்தை நிறைவு செய்து நாடு திரும்பவுள்ள. வினோத் குரியன் ஜேக்கப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பு கொழும்பில் உள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் செவ்வாய்கிழமை இடம்பெற்றுள்ளது.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சுக்கு வருகை தந்த இந்திய பிரதி உயர்ஸ்தானிகரை இராஜாங்க அமைச்சர் வரவேற்றதுடன், பின்னர் முக்கிய விடயங்கள் குறித்து சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

மேலும், இந்த சந்திப்பினை நினைவு கூறும் வகையில் இராஜாங்க அமைச்சர் தென்னகோன் இந்திய பிரதி உயர்ஸ்தானிகருக்கு நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கினார்.

இந்தச் சந்திப்பின் போது இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் உதவி பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேர்ணல் புனீத் சுஷிலும் கலந்து கொண்டார். (நி)

# இலங்கையில் மாற்றுத்திறனாளிகளால் சாரதி அனுமதிப்பத்திரம் பெற முடியாத நிலை

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

எமது நாட்டில் 17 இலட்சம் மாற்றுத்திறனாளிகள் இருப்பதாகவும் அவர்களுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் காலாவதியான திட்டம் பின்பற்றப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சர்வதேச தரங்களுக்கேற்ப அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளால் செயற்படுத்தப்படும் திட்டங்கள் நடைமுறையில் உள்ளதால் இந்தத் திட்டத்தை பகுப்பாய்வு செய்து, எமது நாட்டிலுள்ள காலாவதியான முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ள போதிலும் இதுவரை அது அமுல்படுத்தப்படாதுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறானதொரு புதிய முறையை ஏற்றுக்கொண்டது நல்ல விடயம் தான். என்றாலும் அது செயற்படுத்தப்படாமை தான் பிரச்சினைக்குரிய விடயம்.

இந்த சுற்றறிக்கையை விரைவில் செயற்படுத்த போக்குவரத்துத் துறை அமைச்சர் தலையிட வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டதன் பிற்பாடும் இதனை நடைமுறைப்படுத்தாமல் இருக்குமாறு பாராளுமன்றத்தில் பல்வேறு தரப்பினரும் அழுத்தங்களை பிரயோகித்ததாகவும் தெரிவிக்கப்படுவதாகவும் இந்த சுற்றறிக்கை அமுல்படுத்தப்படும் என்ற உறுதிப்பாட்டை வழங்கு மாறும் எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுகோள் விடுத்தார். (நி-5)

# அரிசி உட்பட சில தானியங்கள் போதுமான அளவு கையிருப்பில்

## இறக்குமதி தேவையில்லை என்கிறது விவசாய திணைக்களம்

(கொழும்பு)

இலங்கைக்கு இவ் வருடம் அரிசி மற்றும் பச்சைப்பயறு, பீன்ஸ், கௌபி,பட்டாணி, நிலக்கடலை போன்றவற்றை இறக்குமதி செய்யத் தேவையில்லை என விவசாயத் திணைக்ளம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் விவசாயிகளுக்கு இரசாயன உரங்களை வழ ங்கும் நடவடிக்கையின் மூலம் நாடு தற்போது நெல் மற்றும் ஏனைய உணவுப் பயிர்களில் தன்னிறைவு நிலையை அடைந்துள்ளதாக திணை க்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நாட்டின் வருடாந்த அரிசித் தேவை 24 இலட்சம் மெற்றிக் தொ[illegible]ந்த பருவகால [illegible] மூலம் 27 இலட்ச[illegible] மெற்றிக் [illegible]ன் அரிசியை உ[illegible]பத்தி செய்ய முடிந்துள்ளதாகவும் அத்திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

பச்சைப்பயறுக்கான ஆண்டுத் தேவை 20,000 மெற்றிக் தொன், இந்த ஆண்டு 13,439 மெற்றிக் தொன் பச்சைப்பயறு அறுவடை செய்யப்பட்டுள்ளது.

மேலும், பட்டாணிக் கான வருடாந்த தேவை 15,000 மெற்றிக் தொன் மற்றும் இந்நாட்டின் பட்டாணி உற்பத்தி 13,740 மெற்றிக் தொன் ஆகும்.

இந்நாட்டின் வருடாந்த கௌபிக்கான தேவை 20,000 மெற்றிக் தொன் என்றாலும் இவ்வருடம் 17,866 மெற்றிக் தொன் கௌபி அறுவடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

கடலையின் வருடாந்தத் தேவை 35,000 மெற்றிக் தொன் எனவும் இந்த ஆண்டு 36, 498 மெற்றிக் தொன் கடலை அறுவடை செய்யப்பட்டுள்ளது.

இந்நாட்டின் நிலக்கடலைக்கான வருடாந்தத் தேவை 10,000 மெற்றிக் தொன் எனவும் இவ்வருடத்தில் அதன் அறுவடை 6408 மெற்றிக் தொன் எனவும் கூறப்படுகிறது.

இதன்படி, நாடு தற் போது அரிசி, பச்சைப் பயறு, பட்டாணி, கௌபி, உளுந்து, நிலக் கடலை போன்றவற்றில் தன்னிறைவு அடைந்துள்ளதால், இவ்வருடம் மீண்டும் அந்தப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய அவசியமில்லை என விவசாய திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

# உயர்தரப் பரீட்சைக்கான இணையவழி விண்ணப்பங்கள்

## 28 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்

### கல்வி அமைச்சு அறிவித்தல்

(கொழும்பு)

2023 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கான இணையவழி விண்ணப்பங்கள் இம்மாதம் 28 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அந்த வகையில், 2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை எதிர்வரும் நவம்பர் மாதம் 27 ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# விரைவில் மலையகத்தில் பல்கலைக்கழகம்

(கொழும்பு),

நுவரெலியா மாவட்டத்தில் பல்கலைக்கழகம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான பணிகளை முன்னெடுத்து வருவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து இருநூறு வருடங்கள் கடந்துள்ளதாக தெரிவித்த அவர், இது தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் அரசாங்கத்துடன் இணைந்து வேலைத்திட்டத்தை ஏற்பாடு செய்துள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பான விடயங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக கொட்டகலை பிரதேசத்திற்கு விஜயம் செய்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

எந்தவொரு சமூகத்திற்கும் அநீதி இழைக்கப்பட மாட்டாது எனவும் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# ஸ்ரீமத் போகர் பழனி ஆதீனம் சுவாமிகள் திருக்கோணேஸ்வரர் ஆலயத்திற்கு விஜயம்

(திருமலை)

இலங்கைக்கு வருகை தந்துள்ள ஸ்ரீமத் போகர் பழனி ஆதீனம் சுவாமிகள் நேற்று திருகோணமலைக்கு விஜயம் செய்தார்.

வரலாற்று சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூஜை வழிபாடுகளில் ஸ்ரீமத் போகர் பழனி ஆதீனம் சுவாமிகள் கலந்து கொண்டார்.

ஆலயத்தின் தொன்மையான வரலாறு, சோழர் காலத்தில் ஆலயத்திற்கும் இந்தியாவுக்குமிடையில் காணப்பட்ட தொடர்புகள் உள்ளிட்ட விடயங்களையும் சுவாமிகள் இதன் போது கேட்டறிந்து கொண்டார். (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 250 | 280 | 320 |
| உருளைக்கிழங்கு | 220 | 240 | 220 | 240 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 500 | 600 |
| தக்காளி | 480 | 500 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 220 | 300 |
| கோவா | 250 | 220 | 300 | 300 |
| கரட் | 400 | 500 | 500 | 600 |
| பூசணி | 120 | 100 | 100 | 150 |
| புடோல் | 140 | 140 | 150 | 200 |
| வாழைக்காய் | 120 | 150 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 450 | 450 | 350 | 550 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 150 | 160 |
| பாகற்காய் | 450 | 300 | 400 | 500 |
| வெண்டக்காய் | 200 | 160 | 180 | 320 |
| கருணைக் கிழங்கு | 180 | 170 | 200 | 200 |
| பயற்றங்காய் | 250 | 250 | 180 | 200 |
| லீக்ஸ் | 220 | 220 | 250 | 300 |
| பீற்றூட் | 400 | 300 | 350 | 350 |
| கறிமிளகாய் | 350 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 300 |
| போஞ்சி | 500 | 400 | 400 | 550 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 280 | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 50 | 80 | 100 |
| தேசிக்காய் | 150 | 150 | 200 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 250 | 250 | 300 | 320 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 50 | 160 | 50 | 60 |
| ஈரப்பலா | 160 | 200 | 150 | 160 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 167

### மது அருந்தி வண்டி ஓட்டினால் நாட்டுக்கும் வீட்டுக்கும் கேடு

ஒரு பெரிய வணிக அங்காடியில் ஒரு ஐந்து வயது மதிக்கத்தக்க சிறுவன் பணம் செலுத்துபவரிடம் உரையாடிக் கொண்டிருந்தான். பணம் பெறுபவர், உன்னிடம் இந்த பொம்மை வாங்குவதற்கு தேவையான பணம் இல்லை என்று சொன்னார். அந்த சிறுவன் இந்த பணம் போதாதா என்று வினவினான்.

அவர் மீண்டும் பணத்தை எண்ணி விட்டு இல்லடா செல்லம் குறைவாக உள்ளது என்றார். அந்த சிறுவன் அந்த பொம்மையை கையிலேயே பிடித்திருந்தான்.

நான் அந்த சிறுவனிடம் அந்த பொம்மை யாருக்கு தர போகிறாய் என்று கேட்டேன். அதற்கு அந்த சிறுவன் அது தன் தங்கைக்கு ரொம்ப பிடித்ததாகவும் அவள் பிறந்தநாள் அன்று அவளுக்கு பரிசளிக்க போவதாகவும் கூறினான்.

மேலும் அவன் பேச தொடர்ந்தபோது என் இதயம் நின்று விட்டது போல் உணர்ந்தேன். அவன் கூறியது இந்த பொம்மையை என் அம்மாவிடம் கொடுத்தால் அவர்கள் என் தங்கையிடம் கொடுத்து விடுவார்கள். என் தங்கை கடவுளிடம் சென்று விட்டாள்.

என் அம்மாவும் கடவுளிடம் செல்ல இருக்கிறார். நான் என் தந்தையிடம் இந்த பொம்மை வாங்கி வரும் வரை அம்மா கடவுளிடம் செல்ல வேண்டாம் என்று கூறி விட்டு வந்தேன்.

எனக்கு என் தங்கையும் அம்மாவும் ரொம்ப பிடிக்கும். அம்மா கடவுளிடம் செல்ல வேண்டாம் என்று அப்பாவிடம் கேட்டேன், ஆனால் அம்மா கடவுளிடம் செல்லும் நேரம் வந்துவிட்டதாக கூறினார்.

மேலும் அவன் கையில் அவனுடைய புகைப்படம் ஒன்றை வைத்து இருந்தான். அதை தன் அம்மாவிடம் கொடுத்தால் அவர்கள் தன் தங்கையிடம் அதை கொடுப்பார்கள். அதனால் அவள் தன்னை மறக்காமல் இருப்பாள் என்றும் கூறினான்.

நான் என்னிடம் இருந்த பணத்தை அவனுக்கு தெரியாமல் அவன் வைத்திருந்த பணத்துடன் சேர்த்து, மீண்டும் எண்ணி பார்க்கலாம் என்று சொன்னேன். அவனும் இசைந்தான். நாங்கள் எண்ணிய போது போதிய பணத்திற்கு மேல் இருந்தது அவன் கடவுளுக்கு நன்றி கூறினான்.

நான் கனத்த மனதுடன் அங்கிருந்து நகர்ந்தேன். பின்னர் உள்ளூர் தினசரிப் பத்திரிக்கை ஒன்றில் படித்தது என் நினைவிற்கு வந்தது. மகிழ்வூந்தில் பயணம் செய்த அம்மா மற்றும் மகள் மீது ஒரு திறந்த சரக்கு வண்டி மோதி விபத்துக்குள்ளானது என்றும் அதன் ஓட்டுநர் குடித்து இருந்ததாலேயே விபத்து நிகழ்ந்தது என்றும் வந்த அந்த செய்தி மேலும் மகள் சம்பவ இடத்திலேயே இறந்ததாகவும் தாய் உயிருக்கு போராடும் நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் என்றும் அவர் கோமா நிலையில் உள்ளார் என்றும் வந்த அந்த செய்தி இந்த சிறுவன் அவர்கள் மகனா? இரண்டு நாள்கழித்து தினசரி பத்திரிகையில் அந்த செய்தி விபத்துக்குள்ளான பெண் இறந்து விட்டாள் என்று. நான் அவரது இறுதி சடங்கிற்கு சென்றேன். அச் சிறுவனின் அம்மா சடலமாக கிடந்தாள். கையில் சிறுவனின் புகைப்படமும் அந்த பொம்மையும் இருந்தது. அங்கிருந்து கனத்த இதயத்துடன் திரும்பினேன். அந்த சிறுவன் தன் அம்மாவிடமும் தங்கையிடமும் வைத்திருந்த அன்பும் பாசமும் அப்படியே உள்ளது.

ஆனால் ஒரு குடிகாரன் குடி போதையில் வாகனம் ஓட்டியதால் ஒரு நொடியில் அந்த குடும்பம் சிதைந்து விட்டது. தயவுசெய்து மது அருந்தி விட்டு வாகனம் ஓட்ட வேண்டாம்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## 45 ஆண்டுகளுக்கு பின் தாஜ்மகாலின் சுற்றுச் சுவரை சூழ்ந்த வெள்ளம்

(டில்லி)

யமுனை ஆற்றின் நீர் மட்டம் அதிகரித்ததால் 45 ஆண்டுகளுக்கு பின்னர் தாஜ்மகாலின் சுற்றுச் சுவரை வெள்ள நீர் சூழ்ந் துள்ளது.

டில்லி, மகாராஷ்டிரா, குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், உத்திரபிரதேசம், காஷ்மீர் உள்ளிட்ட வட மாநிலங்களில் வரலாறு காணாத அளவு மழை பெய்து வருகிறது. அதேபோல இமாச்சல பிரதேசத்தில் இடைவிடாத மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப் பட்டுள்ளது. ரவி, பியாஸ், சட்லுஜ், ஸ்வான் மற்றும் செனாப் உள்ளிட்ட அனைத்து முக்கிய ஆறுகளிலும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

குறிப்பாக டில்லியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. நகரின் முக்கிய சாலைகளில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. பல இடங்கள், சாலைகள், பாலங்கள் நீரில் மூழ்கிய நிலையில் காணப்படுகின்றன. ஏற்கனவே யமுனை ஆற்றின் கரையோரம் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

கடும் மழையின் காரணமாக யமுனை ஆற்றின் நீர்மட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. வெள்ளப் பெருக்கினால் யமுனை ஆற்றின் நீர்மட்டம் உலக அதிசயங்களின் ஒன்றான தாஜ்மகாலின் சுற்றுச் சுவரை தொட்டுள்ளது. ஏற்கனவே 45 ஆண்டுகளுக்கு முன்னர் இதேபோன்ற மழை வெள்ளத்தினால் தாஜ்மகாலின் சுற்றுச் சுவரை தண்ணீர் சூழ்ந்தது.

இதுகுறித்து தாஜ்மகாலின் தொல்லியல்துறை பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாவது தாஜ்மகாலின் கட்டுமானம் எவ்வளவு பெரிய வெள்ளம் ஏற்பட்டாலும் பாதிக்காத வகையில் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. கடைசியாக தாஜ்மகாலின் பின்பக்க சுவரை வெள்ளம் தொட்டது 1978 இல் தான்.

1978 ஆம் ஆண்டில், யமுனை ஆற்றின் நீர் மட்டம் 508 அடியாக அதிகரித்தது. இதுதான் அதிகபட்ச அளவாக பார்க்கப்பட்டது. தாஜ்மஹாலின் பாசாய் காட் புர்ஜின் வடக்குச்சுவரை நீர் தொட்டது. அந்த நேரத்தில் கிட்டத்தட்ட 22 அறைகளுக் குள் தண்ணீர் புகுந்து, சேறும் சகதியுமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ரி-5)

## தானிய உ...

## அதிர்...

(மொஸ்கோ) –

கருங்கடலில் ...
பாதுகாப்பாக ...
அனுமதிக்கும் ச...
என ரஷ்யா அறிவ...

கடந்த திங்கட்கிழமையுடன் காலாவதியாகியுள்ள இந்த உடன்படிக்கை கடந்தவருடம் ரஷ்யா-உக்ரைன் மீது போர் தொடுத்ததை தொடர்ந்து சர்வதேச அளவில் உணவுப்பொருட்களின் விலைகள் பல மடங்கு அதிகரிப்பதை தடுத்தது என்ற கருத்து காணப்படுகின்றது.

உலகில் அதிகளவு விவசாய உற்பத்தியில் ஈடுபடுகின்ற நாடுகளின் பட்டியலில் ரஷ்யாவும் உக்ரைனும் உள்ளன.

கடந்த வருடம் ஐக்கிய நாடுகளும் துருக்கியும் இணைந்து முன்னெடுத்த முயற்சிகளால் உடன்படிக்கை சாத்தியமானதை தொடர்ந்து உக்ரைன் 33 மில்லியன் மெற்றிக்தொன் தானியங்களை ஏற்றுமதி செய்திருந்தது.

எனினும் இந்த உடன்படிக்...

மை... பே... வி... ம... தீ... ரவ... மீ... நா... ஏ... யு... வு... ஏ... மு... கா... தா... ற்... படு...

## அவுஸ்திரேலியாவில் பல வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து

### அறுவர் மருத்துவமனையில்





(கன்பெரா)

குயின்லாந்தில் இடம்பெற்றுள்ள பல வாகனங்கள் தொடர்புபட்ட விபத்தொன்று இடம்பெற்றுள்ள அதேவேளை அமெரிக்காவின் தாங்கிகளை கொண்டு சென்று கொண்டிருந்த வாகனமும் இந்த விபத்தில் சிக்குண்டுள்ளது.

இந்த விபத்தில் அமெரிக்காவின் ஏழிகளை தாங்கிகளை ஏற்றிச் சென்ற டிரக்கும் சிக்குண்டுள்ளது என்பதை அவுஸ்திரேலிய பாதுகாப்புத் திணைக்களம் உறுதி செய்துள்ளது.

எட்டு வாகனங்களுக்கு மேல் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன என தெரிவித்துள்ள அவுஸ்திரேலிய பொலிஸார் நாங்கள் அந்தப் பகுதிக்குச் சென்ற வேளை மூன்று வாகனங்கள் தீப்பிடித்து எரிந்து கொண்டிருந்தன. மூன்று வாகனங்கள் முற்றாக சேத மடைந்துள்ளன எனவும் தெரிவித்தனர்.

அந்தப் பகுதியை பொலிஸார் விசேட வலயமாக பிரகடனம் செய்துள்ளனர்.

காயமடைந்த ஆறு -பேர் மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர். (ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

# உடன்படிக்கையிலிருந்து விலகியது ரஷ்யா

# ர்ச்சியில் உலக நாடுகள்

(...னா)

**ில் உள்ள தனது துறைமுகங்கள் ஊடாக உக்ரைன் ாக தனது தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கு ம் சர்வதேச உடன்படிக்கையை நீடிக்கப்போவதில்லை அறிவித்துள்ளது.**



கையை தற்போதைக்கு பின்பற்றப் போவதில்லை என ரஷ்யா தெரிவித்துள்ளது. தனது தானிய ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

2022 பெப்ரவரியில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் உலக நாடுகளில் உணவு நெருக்கடியை ஏற்படுத்தியதுடன் பணவீக்கத்தையும் அதிகரித்தது.

2021 இல் உக்ரைனும் ரஷ்யாவும் கோதுமையை அதிகளவு ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முதலாவதாகவும் ஐந்தாவதாகவும் காணப்பட்டன.

கடந்த வருடம் ஜூலை மாதம் உக்ரைன் கருங்கடல் ஊடாக தனது தானியங்களை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதியளிக்கும் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்துவதில் ஐ.நாவும் துருக்கியும் வெற்றி கண்டன.

இந்த உடன்படிக்கை உக்ரைனின் துறைமுகங்களில் இருந்து கருங்கடல் ஊடாக பொஸ்பரஸ் ஜலசந்திக்கு பாதுகாப்பாக கப்பல்கள் பயணிப்பதற்கான வாய்ப்பை வழங்கியது.

இத்துடன் ரஷ்யாவின் உரங்கள் ,உணவுப்பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான இணக்கப்பாடும் எட்டப்பட்டது.

இந்த உடன்படிக்கையில் தனது ஏற்றுமதிகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உரிய விதத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என ரஷ்யா குற்றம்சாட்டி வந்துள்ளது.

எனினும் ஒக்டோபர் 31ம் திகதி செவெஸ்டபோலில் உள்ள தனது கருங்கடல் கடற்கலங்கள் மீது ஆளில்லா விமானத்தாக்குதல் இடம்பெற்றதாக தெரிவித்து ரஷ்யா இந்த உடன்படிக்கையிலிருந்து விலகியது.

எனினும் நவம்பர் 20 திகதி ரஷ்யாஇந்த உடன்படிக்கையில் மீண்டும் இணைந்துகொண்டது.

மார்ச் 2023 இல் மேலும் 60 நாட்கள் உடன்படிக்கையில் நீடித்திருக்க இணங்கிய ரஷ்யா மே மாதத்தில் அதனை மறுபரிசீலனை செய்தது.

எவ்வளவு தானியங்கள் கப்பல்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டுள்ளன? இந்த உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது முதல் கருங்கடல் பகுதியிலிருந்து 32.9 மில்லியன் தானியங்கள் கப்பல் மூலம் சென்றுள்ளன என ஐ.நா மதிப்பிட்டுள்ளது.

ஐரோப்பாவின் தானியக் களஞ்சியம் என உக்ரைன் குறிப்பிடப்படுகின்றது.அதன் நிலத்தில் 55வீதத்திற்கும் அதிகமானது விவசாயத்திற்குரியது.

யுத்தத்திற்கு முன்னர் உலகில் அதிகளவு கோதுமையை உற்பத்தி செய்த நாடுகளில் 9வது இடத்திலும் சோளத்தை உற்பத்தி செய்த நாடுகளில் 8 ஆவது இடத்திலும் உக்ரைன் காணப்பட்டது.

மூன்று கண்டங்களை சேர்ந்த 45 நாடுகள் இந்த உடன்படிக்கையின் கீழ் உணவுப்பொருட்களை பெற்றுள்ளதாக ஐ.நாதெரிவித்துள்ளது. கருங்கடலில் இருந்து கப்பல் ஒன்று வழமையாக 32000 தொன் பொருட்களுடன் புறப்படுவது வழமை.

சீனாவிற்கே அதிக தானியங்கள் இதுவரை சென்றுள்ளன (7.96 தொன்) ஸ்பெயின், துருக்கி, இத்தாலி நெதர்லாந்து ,எகிப்து ஆகிய நாடுகளிற்கும் பெருமளவு தானியங்கள் சென்றுள்ளன. (நி-5)

ள்

து



மூன்று

க சேத

னவும்

பொலி

யமாக

துள்ள-

வு -பேர்

அனு

(நி)

## கட்டுங்கடங்காமல் எரியும் காட்டுத்தீ சர்வதேச உதவியை நாடியுள்ள கனடா

(ஒட்டாவா)

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கொழுந்து விட்டு எரியும் காட்டுத்தீயை அணைக்க ஆயுதப்படைகள் மற்றும் சர்வதேச தீயணைப்பு வீரர்களின் உதவி கோரப்பட்டுள்ளது.

கனடா இந்த ஆண்டு மிகவும் மோசமான காட்டுத்தீ பாதிப்புக்களை சந்தித்து வருகிறது.

ஆண்டு தொடங்கி தற்போது வரை 1 கோடி ஹெக்டர் காட்டுப் பகுதி தீக்கிரையாகி உள்ளது.

இதில் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் மட்டும் 12 லட்சம் ஹெக்டர் காட்டுப்பகுதி தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்நிலையில் மழைப் பொழிவு இல்லாமல் வறண்டு போயுள்ள பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கட்டுக்கடங்காமல் பரவி வரும் காட்டுத்தீயை அணைக்கும் பணியில் கனடா வீரர்கள், வெளிநாட்டு வீரர்களும் உட்பட சுமார் 2,000 பேர் ஈடுபட்டுள்ளனர்.

இது போதாது என்று மேலும் ஆயிரம் சர்வதேச தீயணைப்பு வீரர்களின் உதவியை பிரிட்டிஷ் கொலம்பியா அதிகாரிகள் நாடியுள்ளனர்.

அமெரிக்கா, மெக்சிக்கோ, தென்னாபிரிக்கா, தென் கொரியா, அவுஸ்திரேலியா, பிரான்ஸ், நியூசிலாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த 1,367 தீயணைப்பு வீரர்களும் கனடா தீயணைப்புப் பணியாளர்களும் உதவி வருகின்றனர். (நி)

## அருகிவரும் ஆமைகளை காப்பாற்றி மலேசிய காட்டுக்குள் அனுப்பிய சிங்கப்பூர்



(கோலாலம்பூர்)

விலங்கு ஆய்வு, கற்றல் அமைப்பு ஏக்கர்ஸ் நேற்று 3 ஆமைகளை மீண்டும் வனப் பகுதிக்குள் விட்டுள்ளது.

வனவிலங்குகளின் சட்ட விரோத விற்பனையை ஒடுக்க இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது,

68ஆவது முறையாக இந்த அமைப்பு இந்த முயற்சியை மேற்கொண்டது.

அருகிவரும் உயிரினங்களில் ஒன்றான மலேசியாவிலும் இந்தோனேசியாவிலும் வாழக்கூடிய பெரிய வகை ஆமையை ஏக்கர்ஸ் அமைப்பு 2019 ஆம் ஆண்டு பெற்றது.

அது சுங்கே பூலோ வெட்லேண்ட் ரிசர்வ் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. அதன் ஓடுகளின்மீது சிவப்பு அடையாளங்கள் இருந்தன. அது சட்டவிரோத விற்பனையால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்பட்டது. அந்த ஆமைக்கு ஜாஸ்மின் என்று பெயர் வைத்தது அமைப்பு.


அதன் பிறகு 2020 இல் அமைப்பு ஜினி என்ற மற்றொரு ஆமையை மீட்டது. கம்போடியா, லவோஸ், மலேசியா, மியன்மார், தாய்லந்து ஆகிய நாடுகளில் வாழக்கூடிய அந்த ஆமை சாட்ஸ்வொர்த் டிரைவ் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது.

ஜாஸ்மின் ஜினியுடன் சேர்த்து சலீன் என்ற கருப்பு நிற ஆமையும் காட்டுக்குள் விடப்பட்டது.

அந்தக் கருப்பு நிற ஆமையை 2022 ஆம் ஆண்டு ஜனவரியிலிருந்து தேசியப் பூங்காக் கழகம் பராமரித்து வந்தது.(நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதிப்பொலிஸ்மா அதிபர்களுக்கு எதிராக முறைப்பாடு



(குருமன்காடு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உள்ளிட்ட பொலிஸாருக்கு எதிராக தமிழ் தேசிய மக்கள் முன்னணி வவுனியா மனித வுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை செய்து ள்ளனர்.

கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் வவுனியா மாவட்ட செயற்பாட்டாளர் எஸ். தவ பாலன் ஆகியோர் இந்த முறைப்பாட்டினை நேற்று செய்தனர்.

கடந்த 14 ஆம் திகதி நீதிமன்ற கட்டளைக்கு உட்பட்டு முல்லைத்தீவு குருந்தூர் மலையில் பொங்கல் வழிபாட்டை மேற்கொண்ட போது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர்கள், முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், முல்லைத்தீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோரின் தலைமையில் பௌத்த பிக்குகள், சிங்கள இளைஞர்கள் வழிபாட்டு உரிமையை தடுத்து நிறுத்தி வன்முறையைத் தூண்டியதாகவும் இதனால் குறித்த பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு மனிதவுரிமையை நிலை நிறுத்துமாறும் தெரிவித்து இம்முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-5-250)



உலகத்தின் முதலாவது தமிழ் பேராசிரியரும் முத்தமிழ் வித்தகர் என புகழ் பெற்ற சுவாமி விபுலானந்த அடிகளாரின் 76 ஆவது நினைவுதினம் வவுனியாவில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. (படம்- வசந்தரூபன்)



காலையடி,பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்ற முன்பள்ளியில் மழலையர் கண்காட்சி நிகழ்வு கடந்த 17 ஆம் திகதி இடம்பெற்றது.

# வடக்கில் பக்கவாத நோய்க்கான மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு

## வைத்திய நிபுணர் அஜந்தா

(யாழ்ப்பாணம்)

வடக்கில் பக்கவாதத்துக் குரிய மருந்துகளிற்கு தட்டுப்பாடு காணப்படுகின்றமை ஒரு துர்ப்பாக்கிய நிலை என நரம்பியல் வைத்திய நிபுணர் அஜந்தா கேசவராஜ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதன்கிழமை நடாத்திய ஊடக வியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு பக்கவாதம் ஏற்பட்ட நோயாளிகளை நான்கரை மணித்தியாலத்திற்குள் அந்த சிகிச்சை வழங்கக்கூடிய ஒரு வைத்தியசாலைக்கு நேரடியாக அந்த நோயாளிகளை எடுத்துச் செல்வதன் மூலம் உடனடியாக உரிய பரிசோதனை மேற்கொண்டு மூளையில் எவ்வாறான தாக்கம் ஏற்பட்டுள்ளது என்பதனை நாங்கள் இனங்கண்டு அதற்குரிய நடவடிக்கையை எடுக்க முடியும்.

85 வீதமான பக்கவாதம் ஏற்படுவதற்கு காரணம் மூளையில் ஏற்படுகின்ற இரத்த அடைப்பு ஆகும். எனவே இந்த பக்கவாதத்தை குணப்படுத்துவதற்குரிய மருந்துகள் தற்பொழுது உலகளாவிய ரீதியில் வழங்கப்படுகின்றது.

அது யாழ்.போதனா மருத்துவமனையிலும் இது சம்பந்தமான மருந்து சிகிச்சை முறைகள் தற்பொழுது மக்களுக்காக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதிலே தற்பொழுது துரப்பாக்கியமான நிலை ஏற்பட்டிருக்கின்றது. தற்பொழுது பொருளாதார இன்னல் காரணமாக இதற்குரிய மருந்துகளிற்கு சற்று தட்டுப்பாட்டு நிலை காணப்படுகின்றது.

ஆகவே இந்த தட்டுப்பாடுகளை நாங்கள் கருத்தில் கொள்ளாமல் சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கு உரிய சிகிச்சையினை நாங்கள் வழங்குகின்றோம்.

அதேபோல அவர்களுக்குரிய ஏனைய மருந்து பொருட்களும் இங்கே சேமிப்பில் வைத்திருக்கின்றோம். எனினும் தற்போது இந்த பக்கவாதத்துக்குரிய மருந்து தட்டுப்பாடானது ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது எனத் தெரிவித்தார். (4-5-33-104)

# கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு அருள்மிகு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 22 ஆம் திகதி காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 11 தினங்கள் இடம் பெறவுள்ள இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (4-5)



இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் நேற்று வடமராட்சி ஆழியவளைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார். ஆழியவளை பகுதியில் அமைந்துள்ள SK மாதிரி பண்ணையின் செயற்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் தொடர்பில் பார்வையிட்டார்.

# நீதிமன்ற சான்றுப் பொருட்களை திருடி விற்பனை செய்ய முயன்ற இருவர் கைது



(மன்னார்)

மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாக காணப்பட்ட கஞ்சாவை விற்பனை செய்வதற்கு முயன்ற நீதிமன்ற உத்தியோகத்தர் ஒருவரும் விற்பனை முகவர் ஒருவரும் நேற்று புதன்கிழமை காலை மன்னார் நகரப் பகுதியில் மன்னார் விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர் ஒருவர் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாக வைக்கப்பட்டிருந்த 3 கிலோவுக்கும் அதிகமான கஞ்சாவை திருடி விற்பனைக்காக கொண்டு சென்ற நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேநேரம் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப்பொருளாக காணப்படும் போதைப்பொருட்கள் இவ்வாறு பல வருடங்களாக திருடி விற்பனை செய்யப்படுவதாகவும் சான்றுப் பொருளாக காணப்படும் ஐஸ் போதைப்பொருளும் திருடி விற்பனை செய்து அதற்கு பதிலாக அஜினோமோல்ட் கலந்து வைப்பதாகவும் இன்னும் பலர் இவ்வாறு நீதிமன்ற சான்றுப் பொருட்களான போதைப் பொருள் திருட்டுடன் சம்மந்தப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேகநபர்களை மன்னார் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5-285)

# ஆனையிறவு சோதனை சாவடியில் கஞ்சாவுடன் ஒருவர் கைது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஆனையிறவு இராணுவ சோதனை சாவடியில் 4 கிலோ 160 கிராம் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இராணுவ சோதனை சாவடியில் வைத்து இராணுவ புலனாய்வு பிரிவினர் கைது செய்து, பளை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

பளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்தனர். (4-5-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடி மாத இராசி பலன்கள்

## 17.07.2023 - 17.08.2023

# தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்!



**நம்பியவர்களுக்கு கைகொடுத்து உதவும் சிம்ம இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் விரய ஸ்தானத்தில் லாபாதிபதி புதனோடு இணைந்திருக்கிறார். எனவே தொழிலில் எதிர்பார்த்த அளவு லாபம் கிடைக்குமென்றாலும் விரயங்களும் அதிகரிக்கும். வீடு மாற்றம், இடமாற்றம், தொழில் மாற்றம் போன்றவற்றைச் செய்ய முன்வருவீர்கள். கண்டகச் சனியின் ஆதிக்கம் இருந்தாலும் அது வக்கிர இயக்கத்தில் இருப்பதால் பெரிய அளவில் பாதிப்பு ஏற்படாது. விட்டுக் கொடுத்துச்செல்வதன் மூலம் குடும்ப ஒற்றுமை பலப்படும்.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்கும் குரு பகவான், உங்கள் ராசியைப் பார்ப்பது யோகம்தான். அதிலும் 5 ஆம் பார்வையாக பார்க்கிறார். "ஐந்தும் ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும்" என்பது ஜோதிட நியதி. எனவே பொருளாதாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புனிதப் பயணங்கள் அதிகரிக்கும். அருளாளர்களின் ஆலோசனையால் அனைத்து காரியங்களிலும் வெற்றி பெறுவீர்கள். உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும். உயர் அதிகாரிகளின் பழக்கத்தால் நல்ல காரியங்கள் பலவும் நடைபெறும். "ரண சிகிச்சை செய்தால் தான் நோய் குணமாகும்" என்று சொன்ன மருத்துவர்கள், இப்பொழுது சாதாரண சிகிச்சையிலேயே குணமாக்கி விடலாம் என்று சொல்வார்கள். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். குருவின் பார்வை சகோதர மற்றும் சகாய ஸ்தானத்திலும், பூர்வ புண்ணிய ஸ்தானத்திலும் பதிகின்றது. எனவே வியாபாரம் வெற்றி நடை போடும். வீடு, இடம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பூர்வீக சொத்துக்களில் இருந்த வில்லங்கங்கள் விலகும். எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளுக்கு நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். உத்தியோகத்தில் உங்களுக்கென்று தனி மரியாதை கிடைக்கும். கடமையைச் செவ்வனே செய்து பாராட்டுக்களைப் பெறுவீர்கள். கூட்டுத் தொழில் செய்வோர், தனியாகத் தொழில் தொடங்குவது




பற்றி ஆலோசிப்பீர்கள்.

**சிம்ம - புதன்**

ஆடி 7 ஆம் திகதி, சிம்ம இராசிக்கு புதன் வருகிறார். உங்கள் இராசிக்கு தன -லாபாதிபதியான புதன், உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் இந்த நேரம் மிகுந்த யோகமான நேரமாகும். வாய்ப்புகள் வாசல் தேடி வரும். வருமானம் உயரும். குடும்பத்தில் ஒருவருக்கு மேற்பட்டவர்களும் சம்பாதிக்கும் வாய்ப்பு உண்டு. ஆடை, அணிகலன்கள் வாங்கி மகிழ்வீர்கள், பழைய பாக்கிகள் வசூலாகும். என்றைக்கோ குறைந்த விலைக்கு வாங்கிப் போட்ட இடம், இப்பொழுது அதிக விலைக்கு விற்று லாபத்தைக் கொடுக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இப்பொழுது விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு வெளியில் வரலாமா? என்று சிந்திப்பர். பொதுவாக தொட்ட காரியங்களில் வெற்றி பெறும் நேரம் இது. பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு அவர்கள் எடுக்கும் முடிவு சரியானதாக இருக்கும். வியாபாரம், தொழில் புரிபவர்களுக்கு மாதக் கடைசியில் லாபம் உயரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கேட்ட சலுகைகள் கிடைக்கும். கலைஞர்களுக்கு சகக் கலைஞர்களின் ஆதரவு கிடைக்கும். மாணவ -மாணவிகளுக்கு எதிர்பார்த்த துறை அமையும். பெண்கள் சந்தோஷ வாய்ப்புகளை சந்திக்க நேரிடும். தடைகள் அகன்றோடும். மாதத்தின் பிற்பகுதியில் உங்கள் எண்ணங்கள் ஈடேறும்.

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

# கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள்!



**அமைதியாக இருந்தபடி அரிய பணிகளைச் செய்யும் கன்னி இராசி வாசகர்களே!**

ஆடி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் லாப ஸ்தானத்தில் விரயாதிபதி சூரியனோடு கூடியிருக்கிறார். எனவே விரயங்கள் அதிகரிக்கலாம். அஷ்டமத்து குருவின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத்திற்கென்று ஒரு தொகையைச் செலவிடும் சூழல் உருவாகும். ராகு-கேதுக்களின் ஆதிக்கம் இருப்பதால் ஏற்ற இறக்க நிலை மாற, யோகபலம் பெற்ற நாளில் முறையான வழிபாடுகளை மேற்கொள்ளுங்கள்.

**மேஷ - குரு சஞ்சாரம்**

நவக்கிரகத்தில் சுப கிரகமான குரு பகவான் இப்பொழுது மேஷ ராசியில் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு அஷ்டமத்தில் குரு பகவான் அடியெடுத்து வைத்திருப்பதால் வேலைப்பளு கூடும். இருப்பினும் பொருளாதார நிலை திருப்தி தராது. உத்தியோகத்தில் இடமாற்றம் உறுதியாகலாம்.

வாகனத்தால் தொல்லைகளும், வளர்ச்சிக்கு இடையூறுகளும் அதிகரிக்கும். குருவின் பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிவதால் குடும்பத்தில் நீண்ட நாட்களாகத் தாமதப்பட்டு வந்த காரியங்கள் இப்பொழுது நடைபெறத் தொடங்கும்.

எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்த்து, நேர்மறைச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளுங்கள். கொடுத்த வாக்கை எப்பாடுபட்டாவது காப்பாற்றி விடுவீர்கள். கொடுக்கல் - வாங்கல்களில் பழைய கடன்களை பைசல் செய்தாலும் புதியதாக கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். குடும்பப் பெரியவர்களின் யோசனையைக் கேட்டு நடந்தால் குழப்பங்கள் ஏற்படாது. சுக ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் மருத்துவத்தால் பலன் கிடைக்கும். தாயின் உடல் நலம் சீராகும்.

உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்களை மேல திகாரிகள் ஏற்றுக் கொள்வர். அத்தியாவசியப் பொருட்கள் வாங்குவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள். வெளிநாட்டு வணிகம் ஆதாயம் தரும்.




**சிம்ம - புதன்**

ஆடி 7 ஆம் திகதி, சிம்ம இராசிக்குப் புதன் வருகிறார். உங்கள் ராசிநாதன் புதன் விரய ஸ்தானத்திற்கு வரும்போது விரயங்களே அதிகரிக்கும். வரவு வருவதற்கு முன்னதாகவே செலவு காத்திருக்கும்.

இடமாற்றம், வீடு மாற்றம் பற்றிச் சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடியின் காரணமாக, ஒருசிலர் விருப்ப ஓய்வு பெற்று, பணியில் இருந்து வெளியேற முடிவு செய்வர்.

அரசு வேலையில் இருப்பவர்கள் அதிக கவனத்தோடு செயற்பட வேண்டிய நேரம் இது. உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை மற்றவர்களிடம் கொடுக்க வேண்டாம். உறவினர் வழியில் ஒரு தொகையைக் கொடுத்து உதவும் சூழ்நிலை உருவாகும்.

பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு எதிர்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி பலன் தரும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு மாதத்தின் முற்பகுதியில் லாபமும், பிற் பகுதியில் விரயமும் ஏற்படும்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு குறையும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். மாணவ - மாணவிகளுக்கு மனக் கட்டுப்பாடு அவசியம் தேவை. பெண்களுக்கு உடன் இருப்பவர்களால் பிரச்சினை ஏற்படும். பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். வருமானம் திருப்தி தரும்.

(தொடரும்)

noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 234





சோழ நாட்டிலிருந்து நாகப் பட்டினத் துறைமுகத்தில் ஏறிப் போக வேண்டும். அல்லது பாண்டிய நாட்டிலிருந்து சேதுக்கரையில் ஏற்றி அனுப்ப வேண்டும். இந்த வரண்ட தொண்டை மண்டலத்திலிருந்து போக வேண்டிய அவசியம் என்ன? அதிலும் நாம் வடக்கே படையெடுத்துச் செல்வதற்கு இதனால் தடை ஏற்படுமே என்பதை எண்ணிச் சொன்னேன்!" என்றான் பார்த்திபேந்திரன்.

"அதை நினைத்தால் எனக்கும் உள்ளம் கொதிக்கத்தான் கொதிக்கிறது. அந்தப் பாவி பழுவேட்டரையர்களின் நோக்கம் என்ன தான் என்று தெரியவில்லை. எத்தனை நாள் இதையெல்லாம் சகித்துக் கொண்டிருப்பது? தாத்தா! ஏன் இன்னும் பேசாமல் வாயை மூடிக் கொண்டிருக்கிறீர்கள்? ஏதாவது வாயைத் திறந்து சொல்லுங்கள்!" என்றான் கரிகாலன்.

"குழந்தாய்! இந்தக் கடல் அலைகள் ஓயாமல் 'ஓ' வென்று சத்தமிடுகின்றன. கடல் அலைகளோடு போட்டி போட்டுக் கொண்டு உன் தோழன் பார்த்திபேந்திரனும் கூச்சலிடுகிறான். இதற்கு நடுவில் நான் என்னமாய்ப் பேசுவது? எனக்கோ வயதாகித் தள்ளாமை வந்து விட்டது!" என்றார் மலையமான் மிலாடுடையார். "பார்த்திபேந்திரா! சற்று நேரம் நீ சும்மா இரு. தாத்தா அவருடைய கருத்தைச் சொல்லட்டும்!" என்றான் ஆதித்தகரிகாலன்.

"பின்னே என்ன செய்கிறது? சோழ நாட்டின் பொறுக்கி எடுத்த வீரர் படைகள் இலங்கையில் இருக்கின்றன. அவர்கள் போர்க்களங்களில் வெற்றி மேல் வெற்றி அடைந்து வருகிறார்கள். ஆயிரம் வருடமாக இலங்கை அரசர்கள் வீற்றிருந்து அரசு புரிந்த அநுராதபுரத்தைக் கைப்பற்றி ஜயக்கொடி நாட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீரர்கள் பட்டினி கிடந்து சாகும்படி விட்டுவிடுவதா?" என்றான் ஆதித்த கரிகாலன்.

"அப்படி விட வேண்டும் என்று யார் சொன்னார்கள்? உணவுப் பண்டங்கள் அனுப்ப வேண்டியதுதான். ஆனால்

"இதோ வாயை மூடிக் கொண்டு விட்டேன். பாவம்! தாத்தா தள்ளாத வயதில் மலைக் கோட்டையிலிருந்து கீழே இறங்கி இவ்வளவு தூரம் சிரமப்பட்டு வந்திருக்கிறார். அவர் முன்னால் நான் வாயைத் திறக்கலாமா? இந்தக் கடலுக்குத் தான் கொஞ்சமும் புத்தியில்லை! ஓயாமல் இரைந்து கொண்டிருக்கிறது! இதை அடக்குவார் ஒருவரும் இல்லை. நம் மலைஅரசரிடம் சமுத்திர ராஜனுக்குக் கொஞ்சமும் பயமில்லை போலிருக்கிறது!" என்றான் பார்த்திபேந்திரன்.

"தம்பி! பார்த்திபேந்திரா! அப்படியும் ஒரு காலம் இருந்தது. திருக்கோவலூர் மலையமான் என்ற பெயரைக் கேட்டு இந்தக் காசினியில் உள்ள அரசர்களெல்லாம் நடுநடுங்குவார்கள். இரட்டை மண்டலத்துச் சளுக்கர்களும் வல்லத்து வாண கோவரையர்களும் வைதும்பராயர்களும் கங்கர்களும் கொங்கர்களும் மலையமான் பெயரைக் கேட்டதுமே இடி முழக்கம் கேட்ட சர்ப்பத்தைப் போல் பொந்தில் ஒளிந்து கொள்வார்கள். சமுத்திர ராஜனும் கொஞ்சம் அடக்க ஒடுக்கமாகத்தான் இருப்பான். இந்த உடம்பு கொஞ்சம் தளர்ச்சி அடைந்ததும் இப்போது எல்லாரும் துள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். ஆயிரம் வருடத்துப் பழங்குடியைச் சேர்ந்த என்னை நேற்றைக்கு மேற்கேயிருந்து வந்த பழுவேட்டரையர்கள் ஒழித்து விடப் பார்க்கிறார்கள். அது ஒருநாளும் நடக்கப் போவதில்லை கரிகாலா. பழுவேட்டரையர்களின் நோக்கம் இன்னதென்று தெரியவில்லை என்பதாகச் சற்று முன்னால் சொன்னாய் அல்லவா! அவர்களுடைய நோக்கம் இன்னதென்று நான் சொல்லுகிறேன் கேள்! உன்னையும் உன் சகோதரனையும் தனித்தனியே பலவீனப்படுத்துவதுதான் அவர்களுடைய நோக்கம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கழுதையின் தன்னம்பிக்கை



ஒரு விவசாயி வளர்த்து வந்த வயதான பொதி சுமக்கும் கழுதை ஒன்று தவறி அவன் தோட்டத்தில் உள்ள வறண்ட கிணற்றில் விழுந்து விடுகிறது. உள்ளே விழுந்த கழுதை அலறிக் கொண்டே இருந்தது. அதை எப்படி கிணற்றிலிருந்து வெளியேற்றி காப்பாற்றுவது என்று அவன் விடிய விடிய யோசித்தும் ஒரு யோசனையும் புலப்படவில்லை.

காப்பாற்ற எடுக்கும் எந்த முயற்சியும் அந்த கழுதையின் விலையை விட அதிக செலவு பிடிக்கக் கூடியதாக இருந்தது. அந்த கிணறு எப்படியும் மூடப்பட வேண்டிய ஒன்று. அது மிகவும் வயதான கழுதை என்பதால் அதை காப்பாற்றுவது வீண்வேலை என்று முடிவு செய்த அவன் கழுதையுடன் அப்படியே கிணற்றை மூடி விடுவது என்று முடிவு செய்தான்.

அக்கம் பக்கத்தினரை உதவிக்கு கூப்பிட அனைவரும் திரண்டனர். சற்று அருகில் இருந்த ஒரு மண் திட்டியிலிருந்து மண்ணை மண்வெட்டியில் அள்ளிக் கொண்டு வந்து அந்த கிணற்றில் அனைவரும் போட [illegible]பித்தனர். கழுதை நடப்பதை உணர்ந்து தற்போது மரண பயத்தில் அலறியது. ஆனால் அதன் அலறலை எவரும் செவி மடுக்கவில்லை. இவர்கள் தொடர்ந்து மண்ணை அள்ளி அள்ளி கொட்ட கொஞ்சநேரம் கழித்து அதன் அலறல் சத்தம் அடங்கி விட்டது.

ஒரு பத்து நிமிடம் மண்ணை அள்ளி கொட்டிய[illegible] குள்ளே [illegible]டிப் பார்க்க அவர் பார்த்த காட்சி அவனை வியப்பிலாழ்த்தியது. ஒவ்வொரு முறையும் மண்ணை கொட்டும் போதும் கழுதை தனது உடலை ஒரு முறை உதறி விட்டு மண்ணை கீழே தள்ளி அந்த மண்ணின் மீதே நின்று வந்தது.

இப்படியே பல அடிகள் அது மேலே வந்திருந்தது. இவர்கள் மேலும் மேலும் மண்ணை போட போட கழுதை தனது முயற்சியை கைவிடாது உடலை உதறி உதறி மண்ணை கீழே தள்ளி தள்ளி அதன் மீது ஏறி நின்று வந்தது.

கழுதையின் இடைவிடாத இந்த முயற்சியால் அனைவரும் வியக்கும் வண்ணம் ஒரு வழியாக கிணற்றின் விளிம்பிற்கே வந்து விட்டது. விளிம்மை எட்டியவுடன் மகிழ்ச்சியில் கனைத்த கழுதை ஒரே ஓட்டமாக ஓடி தோட்டத்திற்குள் சென்று மறைந்தது.

வாழ்க்கை பல சந்தர்ப்பங்களில் இப்படி தான் நம்மை படுகுழியில் தள்ளிக் குப்பைகளையும் மண்ணையும் நம் மீது கொட்டி நம்மை சமாதி கட்ட பார்க்கும். ஆனால் நாம் தான் இந்தக் கழுதை போல தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்டு, அவற்றை உதறித் தள்ளி மேலே வர வேண்டும்.

நம்மை நோக்கி வீசப்படும் ஒவ்வொரு கல்லையும் சமர்த்தியமாக பிடித்து படிக்கற்களாக்கிக் கொள்ள வேண்டும். எத்தனை பெரிய குழியில் நீங்கள் விழுந்தாலும் இத்தோடு நம் கதை முடிந்தது என்று கருதாமல் விடாமுயற்சி என்ற ஒன்றைக் கொண்டு நீங்கள் நிச்சயம் மேலே வரலாம்.

நீங்கள் எதுக்குள்ளே விழுந்தா என்ன, உங்க மேல எது விழுந்தா என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரணில்லாதிருக்க முயல்க. உண்மையிருக்க மட்டுமே உழைத்திடுக.

– ஹேராம்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீங்களும் ஒன்றுபட மாட்டீர்கள் அவர்களும் ஒன்றும் தரமாட்டார்கள்

இனப் பிரச்சினைக்கான தீர்வை சிங்கள ஆட்சியாளர்கள் ஒருபோதும் தரமாட்டார்கள் என்பது நிறுதிட்டமான உண்மை.

இதை நாம் கூறும்போது அப்படியானால், எங்கள் பிரச்சினைக்குத் தீர்வே இல்லையா? என்ற கேள்வி எழவே செய்யும்.

இங்குதான் சர்வதேசத்தின் ஆதரவு எமக்கு இருந்தால் மட்டுமே எங்கள் பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமாகும்.

இதை நாம் கூறும்போது, சர்வதேசம் எங்கள் மீது கருசனை கொண்டு இனப் பிரச்சினைக்கான தீர்வை வலியுறுத்துமா? இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்குமா? என்ற ஐய வினாக்கள் எழுகின்றன.

இவ்விடத்தில்தான் ஒரு விடயத்தை நாம் ஐயம் நீக்கித் தெளிவுற வேண்டும்.

அதாவது, இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதற்கு தயாராகவுள்ளது.

அதிலும் யுத்தம் முடிந்த கையோடு, இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடியைக் கொடுத்து இனப் பிரச்சினைக்குத் தீர்வை முன்வைக்குமாறு வலியுறுத்த சர்வதேசம் தயாராகியது.

ஆயினும் அந்த அழுத்தத்தை தவர்த்தி இலங்கை அரசாங்கத்துக்கு உதவுவதில் சில தமிழ் அரசியல் தரப்புகள் தீவிரமாக ஈடுபட்டன.

அதில் ஒன்று ஐ.நா மனித உரிமைகள் பேரவை முன்வைத்த நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுவதற்குக் கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூறியது.

ஆக, தமிழ் அரசியல் தலைமை என்பது தமிழ் மக்களுக்கு உரிமையை பெற்றுக் கொடுப்பதில் காட்டிய கருசனையைவிட, இலங்கை அரசாங்கத்தைக் காப்பாற்றுவதற்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் அதீதமாக உதவியது என்பதுதான் உண்மை.

அதேநேரம் காலம் கனிந்து வந்தபோதெல்லாம் இந்தியாவை எதிர்ப்பதிலேயே காலத்தை செலவழித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இப்போதுதான் சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளது.

ஆக, யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென அண்டை நாடு வலியுறுத்தக் கூடிய காலப்பகுதியில் இந்தியாவுடன் நட்பைப் பேணி காரியத்தைக் கச்சிதமாக முடிக்காமல், இந்தியாவை விமர்சித்து; ஓர் இனம் புரியாத பகைமையை நீடித்து வந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்போது எழுதிய கடிதத்தை 14 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியிருந்தால், அது பயன்பட்டிருப்பதுடன் இலங்கை அரசாங்கத்துக்கு தமிழ்த் தரப்பு வழங்கிய ஆதரவையும் அது பலயீனப்படுத்தியிருக்கும்.

என்ன செய்வது எதிலும் கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் என்பதுதான் நம் இனத்தின் சாபக்கேடு.

ஆகையால்தான் அடித்துக் கூறுகிறோம். நம்மவர்களும் ஒற்றுமைப்படமாட்டார்கள். இலங்கை அரசாங்கமும் இனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரமாட்டார்கள். இது சர்வ நிச்சயம்.

# சிங்களத் தலைவர்களுடன் பேசி தமிழர்களுக்கு எதுவும் கிடைக்காது

## சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிப்பு

சிங்களத் தலைவர்களுடன் பல வருடங்களாக கலந்துரையாடிய போதிலும் இறுதியில் தமிழ் சமூகத்திற்கு எதுவும் கிடைக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அதிகாரப் பகிர்வு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினர் சென்றிருந்த போதும் ஜனாதிபதி பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் ஊழல் ஒழிப்புச் சட்டம் தொடர்பிலேயே கலந்துரையாடினார் என்றும் அவர் அதிருப்தி வெளியிட்டார்.

அதன்பின்னர் தமிழ் அரசியல் தலைவர்கள் அதிகாரப் பகிர்வையே விரும்புவ்தாக வலியுறுத்திய போது அதற்குத்தேவையான கட்டளைச் சட்டங்களை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார் என சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் 13வது அரசியலமைப்புத் திருத் தத்தின் அதிகாரங்கள் மேலும் பலப்படுத்தப்படும் என தான் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியதாகவும் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ம-7)

# 15 வயதுவரையான குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்துவது கட்டாயமானது

## தேசிய நோய்த்தடுப்புப் பிரிவின் பணிப்பாளர்

15 வயது வரையான குழந்தைகளுக்கு கட்டாயமாக போடப்படும் தடுப்பூசிகளை போட வேண்டும் என தேசிய நோய்த் தடுப்பு பிரிவின் பணிப்பாளர் டாக்டர் சமித்த கினிகே கூறியுள்ளார்.

அத்துடன்தேசிய நோய்த் தடுப்புத் திட்டத்தின் கீழ் 15 வயது வரையான குழந்தைகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் தொடர்பில் எவ்வித சந்தேகமும் கொள்ள வேண்டாம் என தொற்றுநோய் தடுப்புப் பிரிவு பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

தேசிய நோய்த்தடுப்பு திட்டத்துக்காக கொண்டு வரப்பட்ட தடுப்பூசிகள் உலக சுகாதார ஸ்தாபனத்தினால் அங்கீகரிக்கப்பட்டவை மட்டுமே எனவும், நோய் தடுப்புக்காக உரிய தடுப்பூசிகளை பிள்ளைகளுக்கு வழங்க பெற்றோர்கள் கவனம்செலுத்தவேண்டுமெனவும் வைத்தியர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார். (ம-7)

# காலியில் இளைஞன் சுட்டுப் படுகொலை

(காலி)

காலியில் இளைஞன் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் காலி- இக்கடுவை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்றுள்ளது.

அப் பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய ஆர்.பிரசன்ன என்ற நபரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாற்றும் குறித்த இளைஞன் மதிய உணவுக்காக மோட்டார் சைக்கிளில் வீடு சென்று திரும்பும் போது வீதியில் வைத்து சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டியில் வந்த இருவர் கைத்துப்பாக்கியால் அவர் மீது சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

சம்பவ இடத்திலேயே உயிரிழந்த இளைஞரின் சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், இது தொடர்பில் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த குறித்த நபர் பாதாளக் குழுக்களுடன் தொடர்பில் இருந்தவர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

# யானை தாக்கி மூதாட்டி பலி

மகியங்கனை தெஹிகொல்ல கிராமத்தில் நேற்று அதிகாலை வீடொன்றின் மீது காட்டு யானை தாக்கியதில் அந்த வீட்டில் வசித்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவரது பேத்தி காயமடைந்துள்ளதாகவும் மகியங்கனை பொலிஸார் தெரிவித்தனர்.

குடகலய தெஹிகொல்ல முகவரியில் வசித்து வந்த ஈ.ஜி.தயவதி என்ற 68 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது பேத்தி பியுமி லக்ஷானி (23) படுகாயம் அடைந்தார்.

அதிகாலை 2:30 மணியளவில் மூதாட்டியும் பேத்தியும் உறங்கிக் கொண்டிருந்த வேளையில் காட்டு யானை தாக்குதல் இடம் பெற்றுள்ளது. (ம-7)

# சுந்தரமூர்த்தி நாயனாரின் குருபூசை விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி சைவ வாலிபர் சங்கம் நடாத்தும் வருடாந்த சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் திருவிழாவானது கும்பழாவளைப் பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் 26.07.2023 புதன்கிழமை இடம்பெற்று காலை 08.00 மணிமுதல் வெள்ளை யானைச் சுருக்கம், திருத்தொண்டர் தொகை ஓதுதலுடன் ஆரம்பமாகி அபிடேகம், விசேட பூசை வழிபாடுகள், சமயகுரவர் நால்வரும் வெள்ளை யானையில் திருவீதியுலா வரல், சமயப்பிரசங்கம் ஆகியவற்றை தொடர்ந்து மகேஸ்வரபூசை முதலாய நிகழ்வுகளுடன் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

குருபூசை விஞ்ஞாபனத்தை சிறப்பிக்கும் முகமாக பூசைக்குரிய பால், தயிர், இளநீர் முதலான அபிடேகப் பொருட்களையும் பூக்கள், பூமாலை என்பவற்றையும் மகேஸ்வரப்பூசைக்குரிய (அன்னதானம்) அரிசி, மரக்கறிகள், தேங்காய், உள்ளிட்டதங்களால்இயன்ற பொருள் உதவியையும், நிதி உதவியையும் நல்கியுதவுவதுடன் குருசங்கம வழிபாடாகிய குருபூசை நிகழ்வில் பங்கேற்று இறையின்பம் பெற்றேகுமாறு குறித்த சங்கத்தினரால் கோரப்பட்டுள்ளது. (ம-7)

# மாவைக் கந்தனுக்கு சனிக்கிழமை கொடியேற்றம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

09.08.2023ம் திகதி திருக்கார்த்திகை திருவிழாவும், 13.08.2023ம் திகதி சப்பறத்திருவிழாவும், 14.08.2023ம் திகதி முக உத்தரத் தேர்த்திருவிழாவும், 15.08.2023 ஆடி அமாவாசை உற்சவம் கீரிமலை கண்டகி தீர்த்தத்திலும் நடைபெறும்.

இவ் உற்சவ காலத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்திற்கு வருகை தரும் அடியவர்களின் நன்மை கருதி பல சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உற்சவ காலத்தில் தினமும் அடியவர்களுக்கு மதியம் 12.30 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும்.

இவ் ஆலயம் மிகவும் புகழ் பெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயம் என்பதால் ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்கள் ஆலயத்தின் புனிதத் தன்மையினை பாதுகாக்கும் நோக்கில் தமிழ் கலாசார உடையணிந்து வருகை தருமாறு தயவுடன் வேண்டி நிற்கின்றோம். அத்துடன் உற்சவம் நடைபெறும் 25 தினங்களும் அறநெறி மாணவர்களின் கலை நிகழ்வுகள் தினமும் மாலை 6.00 மணிக்கு ஆலயத்தில் நடைபெறுவதற்குரிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் குறிப்பிட்ட இம் மாணவர்களின் திறமையினை ஊக்குவிக்கும்நோக்கிலும் இளைய தலைமுறையினர் மத்தியில் அறம் சார்ந்த சிந்தனைகளை வளர்த்தெடுக்கும் நோக்கிலும் ஆலயத்திற்கு வருகைதரும் அடியவர்கள் இக் கலை நிகழ்வுகளில் பங்குபற்றுமாறும் தயவுடன் வேண்டி நிற்கின்றோம் எனக் கோரப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் விஜயன் வருகையிலிருந்து

## பொலநறுவை யுகம் முடியும் வரை- பகுதி I

20


கலாநிதி க.தவலிங்கம்

ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.




கஹபான / புராண (eldings) நாணயக் குத்திகள்



இது பழங்கால நாணயங்களில் உன்னதமானதும் மற்றும் மிகப் பெரியதும் ஆகும்.

அநுராதபுரத்தில் காணப்பட்ட இந்த நாணயங்கள் மெல்லிய தாகவும் நுணுக்கமான விபரங் களுடன் ஆக்கப்பட்டதாகவும் உள் ளன. ஆனால் தென்மேற்கு இலங் கையில் திஸ்மஹாராமவிற்கு அரு கில் உள்ள அக்குருகொடவில் சமீபத்திய கண்டுபிடிக்கப்பட்ட இவ் வகை நாணயங்கள் தடித்த மற்றும் கடினமான செப்பினாலான நாண யங்கள் ஆகும்.

இத்தகைய 500 இற்கும் மேற்பட்ட குறியீடுகள் கஹபான நாணயத்தின் மீது இடப்பட்டுள்ளதென்பது இனங் காணப்பட்டுள்ளது. ஆயினும் இந்த நாணயங்கள் இந்நாட்டில் தயா ரிக்கப்பட்டவையல்ல. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட நாணயங்களாகும் என்றே நம்பப்படுகின்றது.

இவை சர்வதேச வர்த்தகத்தின் ஊடாக இந்திய வணிகர்களின் மூலம் இந்நாட்டிற்குக் கிடைத்துள் ளன. இந்த நாணயங்களைப் பின் பற்றியே இந்நாட்டிலும் "கஹபான" தயாரிக்கப்பட்டுள்ளன.

கி.மு. 3 ஆவது நூற்றாண்டிலி ருந்து கி.பி. 1ஆவது நூற்றாண்டு வரை "கஹபான" நாணயங்கள் எமது நாட்டில் பயன்பாட்டில் இருந்துள் ளன. அநுராதபுரம், தொலுவில, வெஸ்ஸகிரியா, சிகிரியா, புன்னா பொல, தெதிகம, மினுவன்கொடை, உடவளவை, அம்பலாங்கொடை, தீசன்மகாராமய, வல்லிபுரம், கந்த ரோடை, யாழ்ப்பாணம், முல்லைத் தீவு, மாந்தோட்டம், பதவியா, திருகோணமலை ஆகிய பல பிரதே சங்களிலிருந்து இந்த வகையைச் சேர்ந்த நாணயங்கள் கண்டுபிடிக் கப்பட்டுள்ளன.

**சுவாஸ்திக நாணயக்குத்திகள்**

மேலே விபரிக்கப்பட்டுள்ள, பல அடையாளங்களைக் கொண்ட "கஹ பன" நாணய வகைகளுக்கு மேல திகமாக அநுராதபுர காலகட்டத்தில் மேலும் பல நாணயங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன.

யானை மற்றும் ஸ்வஸ்திக்க அடையாளமிடப்பட்ட நாணயங்கள் அவற்றில் ஒரு வகையாகும். அது சிறிய செப்புக் காசாகும். இந்த நாண யங்களை தயாரிக்கின்ற போது "கஹபன" நாணயத்தில் காலத் திற்குக் காலம் குறிக்கப்பட்டிருந்த அடையாளங்களில் ஒரு சிலவற் றைத் தெரிவு செய்து இலச்சினை யொன்றுக்கு எடுத்து அச்சிடுதல் நடைபெற்றுள்ளதென்பதை காணக் கூடியதாக உள்ளது.

நாணயத்தின் ஒரு பக்கத்தில் நடக்கும் யானையொன்றின் உரு வத்தையும் அரை பிறை அடை யாளங்கள் மூன்றின் மூலம் தயா ரிக்கப்பட்ட தாதுகோபுரமொன் றையும் ஸ்வஸ்திகவையும் சதுரக் கோட்டுடன் கூடிய மூன்று கிளை களைக் கொண்ட அரச மரமொன் றையும் காணக்கூடியதாக உள் ளன.

மறுபக்கத்தில் ஸ்வஸ்திகவும் திரிசூலத்தின் அடையாளமொன்றும் தாதுகோபுரத்தின் அடையாளமொன் றும் உள்ளடங்கியுள்ளது. பொதுவாக இவை யானையும் ஸ்வஸ்திகவும் கொண்ட நாணயக்குத்திகள், சிங்க மும் ஸ்வஸ்திகவும் கொண்ட நாணயக்குத்திகள், குதிரையும் ஸ்வஸ்திகவும் கொண்ட நாண யக்குத்திகள், மரமும் ஸ்வஸ்திகவும் கொண்ட நாணயக்குத்திகள் என வேறுபடுத்தலாம்.

அனுராதபுரத்தில்காணப்பட்டயானையும் ஸ்வஸ்திகாவும் கொண்ட நாணயங்கள்(கி.மு 3 – கி.பி.1)



எவ்வாறாயினும் நாணய அல கொன்றாக நோக்குகின்ற போது இந்த நாணயமும் "கஹபன" வகையைச் சேர்ந்த நாணயமொன்றாக இருக் கலாம்.

**யானையும்ஸ்வஸ்திகாவும் கொண்ட நாணயங்கள் (கி.மு 3 - கி.பி.1)**

இவை வட்டவடிவ யானை மற் றும் ஸ்வஸ்திகா உருவங்கள் கொண்ட செப்பினாலான நாண யங்கள் ஆகும்.

முக்கியமாக அநுரா தபுரத்தில் உள்ள அபயகிரிட கோபா வில் காணப்பட்டன.

**சிங்கமும் ஸ்வஸ்திகாவும் கொண்ட ஈயநாணயங்கள் (கி.மு 3 - கி.பி.1)**

சிங்கமும் ஸ்வஸ்திகாவும் கொண்ட ஈய நாணயங்கள் தென் கிழக்கு இலங்கையில் திஸ்மஹா ராமவிற்கு அருகில் உள்ள அக்குரு கொடவில் சமீபத்தில் கண்டுபிடிக் கப்பட்டன. இதன் முன்புறத்தில் வளைந்த முதுகு மற்றும் முன் கால்களை முன்னோக்கி நீட்டிய சிங்கம் வலது பக்கம் குதிக்கிறது. கீழே மூன்று சைத்திய. சில பிராமி எழுத்துக்கள் என்பன காணப் படுகின்றன.

இதன் பின்பக்கத்தில் ஸ்வஸ்தி காவின் வளைந்த பகுதி நாண யத்தின் மையத்திலிருந்து வலது புறமாக சுழலுவது போலும் அத னைச் சுற்றி பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. (தொடரும்...)

யானை, அரச மரம் ஸ்வஸ்திகா அண்டயாளமிடப்பட்ட நாணயக்குற்றிகள்





சிங்கமும் ஸ்வஸ்திகாவும் கொண்ட ஈய நாணயங்கள் (கி.மு 3- கி.பி 1)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கேரள கஞ்சா...

புதன்கிழமை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

வெற்றிலைக்கேணி கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது மாமுனை பகுதியில் கைவிடப்பட்ட 18 பொதிகளில் இருந்து 35 கிலோ 900 கிராம் கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், மீட்கப்பட்ட கஞ்சாவை கடற்படை முகாமில் வைத்துள்ள கடற்படையினர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)

## மீனவர்களுக்கு...

இதற்கமைய, அம்பாந்தோட்டை முதல் பொத்துவில் வரையிலும் புத்தளம் முதல் மன்னார் வரையிலும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கரையோரத்திற்கு அப்பால் உள்ள கடற்பகுதிகளில் மணித்தியாலயத்திற்கு 50 முதல் 60 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதேநேரம், மன்னார் முதல் கொழும்பு வரையிலும், காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பால் உள்ள கடற்பகுதிகளிலும் கடலலை மேல் எழக்கூடும்

குறித்த கடற்பிராந்தியங்களில் கடற்றொழிலில் ஈடுபடுவர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## ஜி.எஸ்.பி பிளஸ்...

தொடர்பான கலந்துரையாடல்கள் தொடரும் அதேவேளையில் இலங்கை போன்ற நாடுகள் முன்னுரிமை வரிச்சலுகைகளை இழக்காது என ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்திற்கு 3.2 பில்லியன் யூரோக்கள் மதிப்பிலான ஏற்றுமதிகளை செய்துள்ளதாக இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## ரணில் - சஜித்...

நல்லது என மக்கள் விரும்புகின்றார்கள், நாமும் விரும்புகிறோம்.

ஆனால், அது எமது கைகளில் மாத்திரம் இல்லை. பல புற சக்திகள் அதற்கு தடையாக இருக்கின்றன. அதை அவர்களே முடிவு செய்ய வேண்டும்.

எமது பிரதான நோக்கு, எமது மக்களின் விடிவுக்கு நிரந்தர தீர்வுகளான காணி உரிமையும், வீட்டு உரிமையும், கல்வி உரிமையும் உறுதிப்படுத்தப்படுவதாகும். கல்வி உரிமைக்கு இந்திய அரசு உதவும் என நான் நம்புகிறேன்.

காணி உரிமையை, நாம் இலங்கையில் பெறுவோம். இவற்றை எப்படி பெறுவது என்பதில் தமிழ் முற்போக்கு கூட்டணி தீர்க்கதரிசனத்துடன் நடக்கின்றது.

நாம் நினைத்தால், உடன் அரசில் இணைந்து அமைச்சு பதவிகளை பெறலாம். ஆனால் அதைவிட இதுவே எமது நிதானமான தீர்க்கதரிசன நோக்கு என்பதை நான் பொறுப்புடன் கட்சி தலைவராகக் கூறி வைக்க விரும்புகிறேன்" என மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (ம-7)

## வவுனியாவில்...

தின் மத்தியில் தீயணைப்பு பிரிவினர் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

கண்டி வீதியில் இரண்டாம் குறுக்கு வீதி சந்தியில் அமைந்துள்ள பிரபல உணவகமொன்று நேற்று இரவு திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

இதனை அவதானித்த பொதுமக்கள் வவுனியா நகரசபை தீயணைப்பு பிரிவினருக்கு தகவல் வழங்கியமையினையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு பிரிவினர் பலத்த போராட்டத்திற்கு மத்தியில் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால் தொடர்ச்சியாக அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு தீப்பரவல் ஏற்படாத வண்ணம் கட்டுப்படுத்தப்பட்டது.

எனினும் இத் தீப்பரவலுக்கான காரணம் எரிவாயு சிலிண்டர் வெடிப்பாக இருக்கலாம் என சந்தேகிக்கின்ற போதிலும் மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இத் தீப்பரவல் காரணமாக உணவகம் பகுதியளவில் சேதமடைந்துள்ளமையுடன் எவ்வித உயிர்ச்சேதங்களும் ஏற்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

## இந்திய...

டன் பிரஸ்தாபித்து உரிய தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தினை சேர்ந்த கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் நேற்று அமைச்சரைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் கடற்றொழில் அமைச்சரிடம், இந்தியஇழுவைப் படகுகளால் தமது கடல்வளம், மீன்பிடி உபகரணங்கள் என்பன அழிக்கப்படுவதாகவும் அதனால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் அதனால்அமைச்சர் ஜனாதிபதியுடன் இந்தியாவுக்கு விஜயம் செய்யும் போது இந்தியப் பிரதமர் மற்றும் உயர்மட்ட அதிகாரிகளிடம் இப் பிரச்சினை தொடர்பாக பேசி இந்திய இழுவைப் படகுகளின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும் தெரிவித்தனர்.

அத்துடன் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு தொழில்சார் பிரச்சினைகள் தொடர்பாக எடுத்துரைத்தது டன் அவற்றுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்குமாறு கேட்டுக் கொண்டதுடன், அவை தொடர்பான கோரிக்கைக் கடிதங்களையும் அமைச்சரிடம் ஒப்படைத்தனர். (ம-7)

## வடக்...

தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கு மாகாணத்தை பொறுத்தவரை யில் தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள ஒருநாள் வேலைத் திட்டத்திற்கு விண்ணபிப்பவர்களின் வீதம் 5 சதவீதத்திற்கும் குறைவாகவே உள்ளது.

2023 ஆண்டின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் வடக்கு மாகாணத்தில் மாத்திரம் ஒருநாள் சேவையில் பெற்றுக்கொண்ட விண்ணப்பங்கள் 4968 ஆகும். மொத்த விண்ணப்பங்கள் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 596 ஆகும். இது நூற்றுக்கு 4 சதவீதம் ஆகும்.

விசேட தேவையின் நிமித்தம் மாத்திரமே அடையாள அட்டையை பெற்றுக்கொள்பவர்கள் பிரதான அலுவலகத்திற்கு செல்ல முடியும். வவுனியா ஆட்பதிவு திணைக்களத்தில் இன்றும் சேவைகள் இடம்பெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

இருப்பினும் ஒருநாள் சேவையை வவுனியா ஆட்பதிவு திணைக் களத்தில் பெற்றுக்கொள்ள இடவசதி போதாமல் காணப்படுகின்றது. இதற்காக வேறு ஒரு இடத்தை ஆட்பதிவு திணைக்களத்திற்காக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

### லக்கி 7 Lucky 7
திகதி 19.07.2023
சீட்டிழுப்பு இலக்கம் 006
L7 இலக்கம் 2 0
வெற்றி இலக்கினம்: கன்னி
வெற்றி இலக்கங்கள்: 1 9 1 1 7 6

### தன நிதானய
திகதி - 2023.07.19
சீட்டிழுப்பு இலக்கம் - 1210
D 02 10 58 79 D

### கொவிசெத
திகதி 2023.07.19
சீட்டிழுப்பு இலக்கம் 3422
ஆங்கில எழுத்து: Y
வெற்றி இலக்கங்கள்: 04 11 44 80
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்
திகதி 19/07/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1528
வெற்றி எழுத்து E
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள் 18 28 33 49

### HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.07.19
சீட்டிழுப்பு இலக்கம் 489
வெற்றி இலக்கினம்: மிதுனம்
வெற்றி இலக்கங்கள்: 25 35 52 53
மிதுனம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத
திகதி 2023/07/19
சீட்டிழுப்பு இலக்கம் 5180
ஆங்கில எழுத்து: M
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 6 9 1 7 1 2
தேசிய லொத்தர் சபை

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2154
வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.07.19
தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 29 32 57 59 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,146,516.40
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 35 46 67 68 Y
DLB

### சனிதா
திகதி 2023.07.19
வெற்றி வாரம் 4315
வெற்றி இலக்கங்கள்: 20 21 46 65 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,554,836.00
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 27 43 50 69 O
DLB

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 3866
வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.07.19
தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 04 30 39 55
கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,197,648/-
"இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 36 45 52 59
DLB

### கப்ருக
திகதி 19.07.2023
வெற்றி வாரம் 1330
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: G 27 19 42 43 59
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 418,602,764.20
கப்ருக "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 06 33 40 66 T
DLB
தொலை பேசி 011-2 333 546-47
Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ஜயோதா Jayoda
திகதி 2023.07.19
வெற்றி வாரம் 1940
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள்: 05 28 48 53 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 44,948,691.20
ஜயோதா "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 11 37 39 58 Q
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 1980
வர்ணம்: ரோஸ்
சீட்டிழுப்பு திகதி: 2023.07.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,648,766/-
வெற்றி இலக்கங்கள்: 38 42 52 53 B
அட கோடிபதி "இரண்டாம் வரம்" வெற்றி இலக்கங்கள்: 25 27 49 62 G
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ICT
# A/L 2025

ஆரம்பம் :
22.07.2023
சனிக்கிழமை 6.45 am

**Evershine Education Centre**
123, Brown Road, Jaffna (16329)

S.Gowsigan (B.Tech, PGDE) 0773784053
அனுமதிகள் தற்போது வழங்கப்படுகின்றன.


## இனப் பிரச்சினை...

ஈழத் தமிழர்களிடையே சர்வதேச ஆதரவுடன் இந்தியா வாக்கெடுப்பு நடத்துவதன் மூலம் இலங்கையில் உள்ள தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தலைமைப் பொறுப்பை ஏற்குமாறு கடிதம் மூலம் உருத்திரகுமாரன் வலியுறுத்தியுள்ளார்.

இராணுவ பலம் மற்றும் பொருளாதார பலம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான சமச்சீரற்ற உறவைக் கருத்தில் கொண்டு, விளையாட்டுக் களத்தை சமன் செய்ய இலங்கை மோசமான இராஜதந்திரத்தையும், போலித்தனத்தையும் பயன்படுத்துவதாக உருத்ரகுமாரன் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், இலங்கையின் அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின் மூலம் இந்தியாவை சிக்க வைக்கும் இலங்கையின் வெற்றிகரமான நகர்வுகளை அனுமதிக்க வேண்டாம் என்று உருத்திரகுமாரன், மோடியிடம் வலியுறுத்தியுள்ளார்.

ஆகவே, 13 ஆவது திருத்தக் கயிற்றை இந்தியா அறுத்தெறிய வேண்டிய தருணம் இதுவெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் பெரும்பான்மையின குடியேற்றங்களுடன் தமிழர் தாயகத்தில் இலங்கையின் ஆக்கிரமிப்புக் குடியேற்றம் இந்தியாவின் புவிசார் அரசியல் நலனுக்கு விரோதமானது மற்றும் ஆபத்தானது என அவரின் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16288)

076 825 7716 (ஆகாஸ்)

## விசா ஆலோசனைகள்

- ஐரோப்பிய நாடுகளுக்கு செல்வதற்கான அரிய வாய்ப்பு
- கனடா இலகுவில் செல்வதற்கான ஆலோசனைகள் வழங்கப்படும்
- கொசோவா நாட்டில் Working visa 15 நாட்களில் பெற்றுத்தரப்படும். (முற்பணம் எதுவும் இல்லை) அனுபவம் தேவை இல்லை
- சர்பியா நாட்டில் Tailor வேலைவாய்ப்புக்கள் உள்ளன. அனுபவம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். (C-6939)

Hybrid International Hub Pvt Ltd, Jaffna
076 250 0098, 021 222 1265

## மேட்டுக்காணி விற்பனைக்குண்டு

கிளாலிச் சந்தியிலிருந்து புலோப்பளைப் பக்கமாக ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் ஆறு ஏக்கர் தென்னம் பிள்ளை வைப்பதற்கு சாதகமான மேட்டுக்காணி நான்கு பக்கமும் தூண்கள் போடப்பட்டு ஏழு வரி முட்கம்பிகளால் அடைக்கப்பட்டு கேற்றும் போடப்பட்டுள்ளது. இக்காணி விற்பனைக்குண்டு.

(16330) 077 649 1027

## நின் சேவை நயப்பில்



திரு.கோவிந்தபிள்ளை
சுப்பிரமணியம் (SLTAS - I)
(ஆசிரிய ஆலோசகர் - ஆங்கிலம்)

ஆசிரியனாய்,..
ஆசிரிய ஆலோசகராய்..
உதவிக்கல்விப் பணிப்பாளராய்...
முப்பத்தாறு வருடங்கள்
நிறைவான நின்சேவைக்கும்
மகிழ்வான ஓய்வுக்கும்
மனதார வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

05.04.1987 - 1992 க/எல்லேமுல்ல முஸ்லிம் வித்தியாலயம்
1992 - 1995 - க/திகாரிய மத்திய கல்லூரி
1996 - 1997 - யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
1997 - 2006 - பிராந்திய ஆங்கில வள நிலையம் (RESC)
2006 - 2010 - யா/ இந்து மகளிர் கல்லூரி
2010- 2011 - யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
2011 - 20.07.2023 - வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலக
நலன்புரிச் சங்கம் (C-6941)

Best Wishes!

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு முடி வெட்டுவதற்கு ஆண் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (16342)

076 759 3357
076 846 6014

## VILLAGE HOTEL JAFFNA EXPRESS

யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...



கட்டணம் - 2800/= (16033)
T.P:077 544 8503

## WORK IN CANADA
WORK PERMITS
COMPUTER TECHNICIANS

COMPUTER சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்தவர்களுக்கும் COMPUTER HARDWARE, NETWORKING துறைகளில் வேலை அனுபவம் உள்ளவர்களுக்கும் பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்

- ✓ 2 YEAR WORK PERMITS
- ✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- ✓ 2 வருடத்தின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

CIMS COLLEGE 0777-068-777 (C-6942)

## WORK IN UK
WORK PERMITS
CIVIL ENGINEERS

CIVIL ENGINEERING சம்பந்தமான DEGREE ,DIPLOMA படித்து CIVIL ENGINEERING துறைகளில் வேலைசெய்பவர்களுக்கு பொருத்தமான வேலை வாய்ப்புக்கள்

- ✓ 5 YEAR WORK PERMITS
- ✓ குடும்பத்தவர்களை உடன் அழைத்துச்செல்லும் வாய்ப்பு
- ✓ 5 வருடங்களின் பின் நிரந்தர வதிவிடவுரிமை (Permanent Resident)

CIMS COLLEGE 0777-068-777 (C-6942)

## சேவைநலன் பாராட்டு



திரு.அ.அருள்வதனன்
(ஆசிரியர்)
(யா/இணுவில் மத்திய கல்லூரி)

எண்ணையும் எழுத்தையும் எம் மாணவச் செல்வங்களுக்கு கண்ணெனக் கணிதமாய் எட்டு வருடங்கள் கற்றுத் தந்து உயர் அடைவினையும் எட்டித்தந்து இன்றுடன் தம் பணியை நிறைவுடன் பூர்த்தி செய்யும் தங்களது சேவையினைப் பாராட்டுவதோடு ஓய்வு காலம் மென் மேலும் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

சேவைக்காலம் :
01.01.2016 – 20.07.2023 வரை

அதிபர், ஆசிரியர் மற்றும்
கல்விசாரா ஊழியர்
நலன்புரிச் சங்கம்
யா/ இணுவில் மத்திய கல்லூரி
(16338)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் கலர்லாப்புடன் கூடிய புகைப்பட நிலையம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

(1) காசாளராக கடமை புரிவதற்கு ஒருவர் தேவை. விண்ணப்பிப்பவர் வாடிக்கையாளருடன் இன்முகத்துடன் அன்பாக பழகுபவராகவும் இதர ஊழியர்களுடனும் அன்போடு பழகி வேலைகளை திறம்பட ஒழுங்குபடுத்தி செயல்படுத்தக் கூடிய வல்லவராகவும் இருத்தல் வேண்டும்.

(2) பிறின்ரிங், புகைப்படம் பிடித்தல்,கிறபிக் டிசைனிங் போன்ற வேலைக்கும் ஆட்கள் தேவை. முன் அனுபவமுள்ளவர்களும் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

தங்கள் சுயவிபரக் கோவையுடன் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு தேசிய அ.அ போட்டோ பிரதியையும் இணைத்து 31.07.2023 இற்கு முன் தபால் மூலம் அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி - (16335)

351, Temple Road, Nallur


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.